Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 342

ஞாயிற்றுக்கிழமை
03 நவம்பர் 2024

ஐப்பசி 17
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் - 16+8+IV | விலை - ரூபா 60







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள் – 16+8+IV
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 342

ஞாயிற்றுக்கிழமை
03 நவம்பர் 2024

ஐப்பசி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"ஆளுநர் குத்தியெண்டாலும் அரிசியானால் சரிதான் கண்டியளோ"



வலி. வடக்கில்

# இன்னொருதொகுதி காணி விரைவில் விடுவிக்கப்படும்?

## ஆளுநர் – இராணுவத்தினர் நேற்றுப் பேச்சு

**யாழ்ப்பாணம், நவ. 3**

**பலாலியில் விரைவில் இன்னொருதொகுதி காணி விடுவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படச் சாத்தியம் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

15

# அறுகம்குடா அச்சுறுத்தல் 6 பேர் இதுவரை கைது!



கொழும்பு, நவ. 3
மட்டக்களப்பு – அறுகம்குடா பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர் என்ற குற்றச்சாட்டில் மாலைதீவு பிரஜை உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள்

15

# ஜனநாயக ஆடை பொருந்தவில்லை

## அநுர அரசுக்கு ரணில் சாட்டை

கொழும்பு, நவ. 3
மக்கள் விடுதலை முன்னணி ஜனநாயக ஆடை அணிந்தாலும் அந்த ஆடை இன்னும் அவர்களின் உடலுக்கு பொருத்தம் இல்லாமல் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அழுக்கான ஆடையை எறிந்துவிட்டு ஜனநாயக ஆடையை அணிந்துகொள்ளுமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

15

# 13ஆவது திருத்தம் முற்றும் தவறானது

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3
மத்திய அரசிடமும், அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டம் முற்றிலும் பிழையானதொன்று என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல்

15

# முறைப்பாடு 1,342

கொழும்பு, நவ. 3
பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை ஆயிரத்து 342 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

15


# மதுபோதையில் பெண் யாசகர்கள் யாழ். நகர்ப் பகுதியில் நடமாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 3
வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெண் யாகசர்கள், யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இரவு வேளையில் மதுபோதையில் நடமாடுவதாகவும், அவர்களால் சிறுவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் என்றும் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்

15

# இலங்கையின் கல்விக்கு ஜேர்மனியால் உதவிகள்

## அந்த நாட்டுத் தூதுவர் வாக்குறுதி



கொழும்பு, நவ. 3
இலங்கையின் கல்வித்துறைக்கு ஜேர்மனி பல்வேறு உதவிகளை வழங்கும் என்று இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் பீலிக்ஸ் நியுமன் தெரிவித்துள்ளார்.
பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும், இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் பீலிக்ஸ் நியுமனுக்கும் இடையிலான சந்திப்பு, பிரதமர்

15

# வாக்காளர் அட்டைகள் விநியோகம்

கொழும்பு, நவ. 3
பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விசேட தினமாக இன்றையதினம் அறிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க 2 ஆயிரத்து 90 தபால் அலுவல

15

# விபத்தில் பலி 1,898!

கொழும்பு, நவ. 3
நாடளாவிய ரீதியில் இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற ஆயிரத்து 818 வீதி விபத்துகளில் ஆயிரத்து 898 பேர் உயிரிழந்துள்ளதாகப் பிரதிப்

15

# கோடிக்கணக்கில் பண மோசடி: பொலிஸாரை ஏய்த்தவர் கைது

கொழும்பு, நவ. 3
வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி கோடிக்கணக்கான பணமோசடியில் ஈடுபட்ட நபரொருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி பெரும் பண மோசடியில் ஈடுபட்ட குழு தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜூன் மாதம்

15


சஞ்சீவி

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியம், திராவிடம் இரண்டும் வெவ்வேறானவை!

## விஜய்க்கு சீமான் பதிலடி



சென்னை, நவ. 12

பாலகன் பாலச்சந்திரனின் நெஞ்சில் குண்டு பாய்ததைப் பார்த்து பதறித் துடித்தால் அது தமிழ்த் தேசியம். அந்த நிலையிலும் பதவியேற்றால் அதுதிராவிடம் என்று நடிகர் விஜய்க்கு பதிலடி கொடுத்துள்ளார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெய ரில் விஜய் கட்சி ஆரம்பித்துள்ளார். கட்சியின் முதலாவது மாநாடு அண் மையில் நடைபெற்றது. மாநாட்டில் கொள்கை விளக்கவுரையை விஜய் ஆற்றினார். இதன்போது, தமிழ்த் தேசியமும் திராவிடமும் தனது இரு கண்கள் என்று விஜய் தெரிவித்திருந் தார். இதற்கே சீமான் சரமாரியான பதிலடியைக் கொடுத்துள்ளார்.

திராவிடம், தமிழ்த் தேசியம் இரண் டும் வேறானவை. ஒன்றில் வீதியின் அந்தப் பக்கம் நில். அல்லது இந்தப் பக்கம் நில். நடுவில் நின்றால் விபத் தில் இறப்பாய் என்றும் விஜய்க்கு சீமான் அறிவுறுத்தியுள்ளார். (ம)

# தேர்தல் முறைப்பாடு; 191 பேர் கைது

கொழும்பு, நவ. 3

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளுக்காக 191 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 6 வேட்பாளர்கள் அடங்குவ தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான நிஹால் தல்துவா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடாளுமன்றத் தேர்தல் தொடர் பான முறைப்பாடுகளுக்காகப் பொலி ஸாரால் கைப்பற்றப்பட்ட வாகனங்க ளின் எண்ணிக்கை 45 ஆகும். இதே வேளை, தேர்தல் தொடர்பாக 168 முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன. இதில் 30 குற்ற முறைப் பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறி யமைதொடர்பாக138 முறைப்பாடுகளும் அடங்கும். (சு)


பொன்னை பொருளை பெறு நற் புத்திரனை
தன் தமிழுக்காய் ஈந்த தலைவர்
தர்மலிங்கத்தின் புதல்வன்

சித்தார்த்தன்



* கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் உருவாக்கத்திற்காக தனது குடும்ப சொத்தை (226 பரப்பு) 100 கோடி பெறுமதி கொண்ட நிலத்தை நன்கொடையாக வழங்கியவர்.
* கல்வியே கண்ணெனக் கொண்டு பாடசாலைகள் அற்ற பிரதேசத்தில் அறிவுப் பசியினை போக்க தன் கிராமமான கந்தரோடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் உருவாக்குவதற்கு தமது சொத்தின் பெரும்பகுதியை வழங்கி பல்லாயிரக்கணக் கானோர்களின் அறிவுப் பசியை தீர்த்தவர்கள்.

என்றும் எம் தமிழ் இனத்திற்காய் தன்னை ஈந்த பெருந்தகையை ஆதரிப்போம்



5 X

* தமது சொந்த நிலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரியவர்கள், சிறியவர்கள் இளைப்பாறி மகிழ சுப்பிரமணியம் பூங்காவினை உருவாக்கியவரின் வழித்தோன்றல் சித்தார்த்தனே...

ஒற்றுமைக்காய் ஒன்றிணைந்து...
எம் மக்களுக்காய் சேவை செய்யும்
எம்மவர்களை ஆதரிப்போம்





5 6



நாடாளுமன்றத் தேர்தல் -2024

4



43 வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் ஆகியவற் றின் மூலம் கைதுசெய்யப்பட்ட போராளிகளுக்காக 1000 க்கும் மேற்பட்ட வழக்குகளை சிங்களத்தின் கோட்டைக்குள் நின்று அச்சமின்றி வெற்றிகரமாக எதிர்கொண்டவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா.

- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொலை முயற்சி,
- பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய கொலை முயற்சி,
- இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கொலை முயற்சி,
- பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கொலை முயற்சி,
- மேஜர் முத்தலிப், மேஜர் ஜெனரல் பாரமிகுலதுங்க கொலைமுயற்சி

இந்த வழக்குகளில் கைது செய்யப்பட்ட அனைவருக்காகவும் சளைக்காமல் சட்டக் களத்தில் நின்று வாதாடி அவர்களை விடுவித்த தமிழர்களின் நம்பிக்கை கே.வி.தவராசா







K.V.தவராசா

சுயேச்சைக்குழு -14



X 3

தமிழர்களின் நீதிக்காக
43 வருடங்களாக
போராடுபவருக்கே
உங்கள் வாக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் அதிபர்களுக்கு இப்போது தீர்வில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3

புகையிரத நிலைய அதிபர் சேவையில் நிலவும் உள்ளீர்த்தல் மற்றும் பதவி உயர்வு சிக்கல்களுக்கு தேர்தல் காலத்தில் நிலையான தீர்வை வழங்குவது பிரச்சினைக்குரியது என்று போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புகையிரத நிலைய அதிபர் சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்பில் வெளியிடப்பட்ட விசேட அறிக்கையில் போக்குவரத்து அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது பொருத்தமற்றது.

பணிப்புறக்கணிப்பு போராட்டத்தின் ஊடாகப் பொதுப்பயணிகளை அசௌகரியங்களுக்குள்ளாக்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தொழிற்சங்கத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# வெள்ளாடையும் - அழுக்காடையும்

அழுக்கான ஆடைகளைக் களைந்துவிட்டு, ஜனநாயக ஆடைகளை அணிந்துகொள்ளுமாறு நாட்டின் ஊடகங்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க. அரசாங்கம் தொடர்பான சில தவறான தகவல்களை ஊடகங்கள் பரப்பி வருகின்றன என்றும் தெரிவித்திருக்கின்றார் அவர். ஜனாதிபதியின் இந்தக் கருத்தியல், அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தி கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரனிடம் இருந்தும் நேற்றுமுன்தினம் எதிரொலித்திருக்கின்றது. ஒருசில 'கேடுகெட்ட' ஊடகங்கள் தகவல்களை திரிவுபடுத்துகின்றன என்பதே சந்திரசேகரன் முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டு.

'பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும். மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும். இதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், சில ஊடகங்கள் காழ்ப்புணர்சியால் அரசாங்கத்துக்கு எதிரான தகவல்களைத் திரிவுபடுத்துகின்றன' என்றும் சந்திரசேகரன் ஊடகங்களை நொந்துகொண்டுள்ளார். தேசிய மக்கள் சக்தியினர் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். ஊடகங்கள் ஜனநாயக ஆடைகளை உடுத்துகின்றனவோ இல்லையோ, அரசாங்கத்துக்கு வெள்ளை ஆடை அணிவிக்கவேண்டிய தேவை ஊடகங்களுக்குக் கிடையாது. உள்ளதை உள்ளபடியாகச் சொல்வதுதான் ஊடகங்கள் முன்னுள்ள பொறுப்பு. பூசி மெழுகலும், பூதாகரமாக்கிக் காண்பித்தலும் தகாது. அழுக்கான ஆடைகளை அணிவதுதான் என்று ஊடகங்கள் முடிவெடுத்திருந்தால், இன்று அநுர நாடாளுமன்ற'முன்னாள் உறுப்பினர்' என்ற அளவோடுதான் இருந்திருக்கமுடியும். முட்டுக்கொடுத்தலும் முழந்தாளில் இருத்தலுமான ஊடகக் கலாசாரம் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் மிகக்குறைவு. ஆதலால்தான், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 4 லட்சம் வாக்குகளைப் பெற்ற ஒருவரால் இம்முறை 48 வீத வாக்குகளுடன் ஜனாதிபதியாக முடிந்திருக்கின்றது.

அநுர தலைமையிலான அரசாங்கம் பணத்தை அச்சிட்டுக் குவிக்கின்றது என்ற குற்றச்சாட்டு ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது. ஆனால் அரசாங்கம் அதைத் திட்டவட்டமாக மறுத்தது. இது தொடர்பான செய்திகளையும் ஊடகங்கள் வெளிப்படுத்தின. இப்போது அநுர அரசாங்கம் பணத்தை அச்சிட்டுள்ளதாகவும் மத்திய வங்கிசார் ஆதாரங்கள் உள்ளதாகவும் கம்மன்பில தெரிவித்திருக்கின்றார். ஆக, இங்கு அவரவர் கருத்துகள்தான் செய்தி மூலம் ஆகின்றதே அன்றி இது அநுர அரசாங்கத்துக்கு எதிரான சதிச்செயல் என்று பொருளல்ல. அப்படிப்பார்த்தால், ருவாண்டாவிலும், இதர பகுதிகளிலும் இலங்கையின் பணம் கறுப்புப் பணமாகச் சேமிக்கப்பட்டிருக்கின்றது என்ற அநுரவின் குற்றச்சாட்டை - கருத்தை வெளிப்படுத்தியது இதே ஊடகங்கள்தானே? நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களை முற்றாக மறுபரிசீலனை செய்வோம். நாணயநிதியத்தின் தாளத்துக்கு ஏற்ப ஆடமாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தியினர் தெரிவித்ததை செய்தியாக்கியதும் இதே ஊடகங்கள்தானே? எனில், இவ்வாறான கருத்துகள் மற்றும் வாக்குறுதிகளுக்கும் ' அவற்றின் நடைமுறைச் சாத்தியமற்ற பிறழ்வுகளுக்கும்' இவற்றில் ஊடகங்களைப் பங்குதாரர்களாக மாற்றியமைக்கும் ஜனாதிபதி அநுரவும், தேசிய மக்கள் சக்தியினரும் என்ன பொறுப்புக் கூறலைச் செய்யப்போகின்றனர்?

ஒரு செய்திக்கு ஒருவர் மூலமாகும்போது, அந்தச் செய்திமூலம்தான் குறித்த செய்திக்கான பொறுப்பாளி. அவருடைய கருத்தை மக்கள் மயப்படுத்துவதுதான் ஊடகங்களின் கடமை. ஒருவகையில் பொறுப்பும்கூட. அவ்வாறான செய்திகள் மக்கள் மயப்படும்போது, அவை தேசிய மக்கள் சக்தியினருக்கு எதிராக அமைகின்றன என்பதற்காக அவற்றை இருட்டடிக்க வேண்டிய தேவை ஊடகங்களுக்கு இல்லை. ஜனாதிபதியாக அநுர இருக்கும்போது, அவருக்கு எதிரான விமர்சனங்களை ஊடகங்கள் துணிந்து முன்வைக்கின்றன என்றால் அதுதான் ஜனநாயகம். அதற்கு அப்பாற்பட்ட ஜனநாயக ஆடையை அணியுமாறு அவர் ஊடகங்களுக்குச் சொல்கின்றார் என்றால், ஜனாதிபதிதான் ஜனநாயகத்துக்குப் புறம்பான ஏதோவொரு ஆடையை அணியப்போகின்றார் என்று அர்த்தம்.




# கடவுச்சீட்டு விநியோகம் டிசெம்பரில் வழமைக்கு

கொழும்பு, நவ. 3

**அடுத்த மாதம் முதல் கடவுச்சீட்டு விநியோகம் வழமைக்குத் திரும்பும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.**

வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை கொள்வனவு விலைமனுக்கோரலுக்காக வெளிநாட்டு நிறுவனத்துடனான ஒப்பந்தத்துக்கமைய 'பி' தொகுதிக்கமைய 50,000 வெற்று வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தத் தொகைக்கு மேலதிகமாக இந்த மாத நடுப்பகுதியில் மேலும் ஒருலட்சம் வெற்றுக் கடவுச்சீட்டுகளும், டிசெம்பர் மாதம் மேலும் ஒரு லட்சத்து 50,000 வெற்றுக் கடவுச்சீட்டுகளும் கிடைக்கப் பெறவுள்ளன. முறையான வழிமுறைக்கு அமைய நிகழ்நிலை முறைமை ஊடாக விண்ணப்பதாரர்கள் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நேரம் மற்றும் திகதியை ஒதுக்கிக் கொள்வதற்கு தொழில்நுட்ப ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முதல் 10 மாதங்களில் 16 லட்சம் சுற்றுலாவிகள்

யாழ்ப்பாணம், நவ. 3

இந்த வருடத்தின் முதல் பத்து மாதங்களில் நாட்டிற்குப் பிரவேசித்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்தைக் கடந்துள்ளது. இதற்கமைய, குறித்த காலப் பகுதிக்குள் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1601, 949 ஆகும் எனச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. கடந்த மாதத்தில் நிறைவடைந்த 27 நாள்களில் மாத்திரம் 117, 141 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். அவர்களில், பெரும்பாலானோர் இந்தியா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா, ரஷ்யா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தே வந்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-66)

# ஒஸ்திரிய தூதுவர் பிரதமர் சந்திப்பு

கொழும்பு, நவ. 3

இலங்கைக்கான ஒஸ்திரி தூதுவர் கெத்ரீனா வெய்ஸர், பிரதமர் ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளார். கலந்துரையாடலில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர, பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ச)



# இடமாற்றம் தவிர்க்கவும்

கொழும்பு, நவ.3

அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் நிறுவனங்களில் புதிய நியமனங்கள் மற்றும் பணி இடமாற்றங்களைச் செய்வதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்க வேண்டும் என அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கையைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் புதிய நியமனங்கள் மற்றும் பணி இடமாற்றங்கள் தேர்தல் சட்டத்துக்கு எதிரானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# டிஜிற்றல் பொருளாதார ஆலோசராக ஹான்ஸ்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் டிஜிற்றல் பொருளாதார விவகாரங்களுக்கான ஆலோசகராக கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிசெயலகத்தில் நியமனக்கடிதத்தை அவர் நேற்றுமுன்தினம் பெற்றுக்கொண்டார். டிஜிற்றல் பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் மாற்றத்தில் இந்த நியமனம் குறிப்பிடத்தக்க ஆரம்ப நடவடிக்கை என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

## நாளை

04.11.2024

திங்கட்கிழமை - ஐப்பசி - 18

சுபநேரம் : 12.04 - 01.34

இராகுகாலம் : 07.34 - 09.04

## நாளொரு நல்வார்த்தை

**எவரொருவர் மரங்களை நடுகின்றாரோ அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்.**

- தோமஸ் புல்லர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

அன்புக்குரிய மக்களே!
'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம்.
எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 'சைக்கிள்' சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!




'இரு தேசங்கள் ஒரு நாடு'
இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில்
ஓரணியாவோம்!

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி




தாயகம் - தேசியம் - சுயநிர்ணய உரிமை

## இராஜதந்திரிகள் மீள் அழைப்பு

கொழும்பு, நவ. 3

குடும்ப மற்றும் அரசியல் உறவுகளின் அடிப்படையில் கடந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 16 இராஜதந்திரிகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மீள அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பில் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் அவர்கள் இலங்கை திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ச)

## மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 3

நாட்டின் பல பகுதிகளுக்கு மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, ஊவா, கிழக்கு, மத்திய, வடமத்திய, சப்ரகமுவ மற்றும் வடக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் இவ்வாறு மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது. (ச)

பாராளுமன்றத் தேர்தல் 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
சிரேஷ்ட சட்டத்தரணி
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

தமிழர் தேசமாய் எழுவோம்...!

- தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தல்!
- இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வலியுறுத்தல்...!
- பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தல்..!
- கடற்தொழில், விவசாயம் உள்ளிட்ட தமிழர் தேசத்தின் நிலையான அபிவிருத்திக்காக உழைத்தல்...!
- தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயமாக்குவதை எதிர்த்தல்..!
- இனப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்தல்...!
- அரச இயந்திரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளை எதிர்த்தல்...!
- வன்முறை, போதைக்குள் சிக்குண்டுள்ள எமது இளைஞர்களை மீட்டு அவர்களை தமிழர் தேசத்தைக் கட்டியெழுப்பும் சக்தியாக மாற்ற செயலாற்றுதல்...!

இரு தேசங்கள்
ஒரு நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**17ம் ஆண்டு நினைவு**



**அமரர் பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)**

அன்னையின் மடியில் 20.07.1982
ஆண்டவன் அடியில் 11.11.2007

திதி : துதியை 3.11.2024

எங்கள் அன்பின் ஜெயாவே
ஆருயிர் செல்வமே ஜெயா
கண்ணிமைக்கும் நேரத்தில்
கண்ணீரில் எம்மை தவிக்கவிட்டு
சென்றாயோ ஜெயா
பதினேழு வருடங்கள் போனாலும்
என்றும் எம் இதயத்தில் வாழ்ந்து
கொண்டு இருப்பாய் ஜெயா
என்றென்றும் உன் நினைவுகளுடன்
வாழ்ந்து கொண்டிருக்கும் உன் குடும்பத்தினர்
உன் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தாவளை இயற்றாலை,
கொடிகாமம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/56574) J-1

# அரசாங்கம் உலக சாதனை

## ரில்வின் பெருமிதம்

கொழும்பு, நவ. 3

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் உலக சாதனை படைத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கூட்டமொன்றில் உரை யாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகின் மிகச்சிறிய அமைச்சரவையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறுவி ஆட்சி செய்து வருகின்றது.

மூன்று அமைச்சர்களால் நாடு ஆட்சி செய்யப்படுவது ஓர் உலக சாதனை. கடந்த கால அரசாங்கங்கள் நாட்டை ஆட்சி செய்வதற்காக 50 - 60 அமைச்சர்களை நியமித்திருந்தது - என்றார். (ச)

# 503 மில்லியன் டொலர் வெளிநாட்டுக்கடன் அடைப்பு

கொழும்பு, நவ. 3

2024 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை 503 மில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைச் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதியமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், 275.1 மில்லியன் டொலர் முதன்மைக் கடன் திருப்பிச் செலுத்துதலாகவும், 227.9 மில்லியன் டொலர் வட்டித் தொகையாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2024 ஜூன் மாத இறுதிக்குள், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் அளவு 37.5 பில்லியன் டொலர். அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக் காலக் கொள்கைக்கு இணங்க, பாதிக்கப்பட்ட இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளின் வெளிநாட்டுக் கடன் சேவை 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதிவரை செலுத்தப்படாத கடன் தவணைகளின் தொகை 5,670 மில்லியன் டொலராகவும், வட்டித் தொகை 2,527 மில்லியன் டொலராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# கிணற்றில் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 3

தீபாவளித் தினத்தன்று பாவனையற்ற கிணறொன்றில் 3 வயது சிறுவன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை, பலாச்சோலை பகுதியில் இடம்பெற்றுள்ளது. சிறுவன் அதில் ஏறி தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# மரண அறிவித்தல்

## நடராஜா மகாதேவன்



தோற்றம் 02.06.1941
மறைவு 01.11.2024

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மேற்கு, அவுஸ்திரேலியா சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகாதேவன் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.11.2024) வெள்ளிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நடராஜா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சீனித்தம்பி - சிவபுரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகிந்தன், தர்ஷன், சுஜீர்த்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷயாணி, சுகன்னியா, சதீஷ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராஜலிங்கம், கமலேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, சற்குணேஸ்வரி, நிர்மலேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, கனகசபை, இராசதுரை, சுப்பிரமணியம், சபாரட்ணம், பொன்னம்பலம் மற்றும் மகேஸ்வரி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிபனா, மகிஜனன், தர்னேஷ், தர்லேஷ், தர்னியா, சிராஷன், சிரோஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2024) திங்கட்கிழமை Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia என்னும் இடத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2



கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் சமூக நலன் மேம்பாட்டிற்காக கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என மக்களுக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது.

# E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**பாராளுமன்ற தேர்தல் - 2024,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும், 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024ஆம் ஆண்டு எமக்கான நேரம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேச்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது சுயவிருப்பத்துடன் அரசியல் அறவழிப் பிரவேசம்...

**அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும், அரசியல் தீர்வும்:** சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் மற்றும் போராட்டங்கள் அறம் சார்ந்தவையாகவும், சுயாதீனமாகவும் ஓர் சீரான தலைமைத்துவ கட்டமைப்புடன் காணப்பட்டது. பேரினவாதம் மற்றும் பிரிவடைகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளினதும் வினைத்திறனற்ற செயலை மாற்றியமைத்தல். பெண் பிரதிநிதித்துவம், தொகுதி அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஷமுதன்மைப்படுத்திய ஓர் கட்டமைப்பு...
அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புக்களும், அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை...

**முயற்சியாண்மை:** வளமான நிலம், உழைக்கக்கூடிய மக்கள் தமிழர் பரப்பில் உள்ள நிலையில் தேவைப்பாடான மூலதனம் மற்றும் முயற்சியாண்மை கேள்விக்குறியாகவே உள்ளது...
இதற்காக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பாரம்பரிய தொழில்களை மேம்படுத்துவதோடு சேவைத்துறைகளை (உ-ம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல்) மையப்படுத்திய மூலதனம் மற்றும் முயற்சியாண்மைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்...

**கல்வி:** ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு அவற்றை இடைவிடாது தொழில் சார்ந்து பயணிக்கக்கூடிய வகையில் தொழிற்கல்வியை வழங்குதல்...
வாழ்வியல் தொடர்பான கல்வி நடவடிக்கைகள், ஆரோக்கிய வாழ்வு (சுகாதாரம்), போக்குவரத்து, பிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு என பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்...

**விளையாட்டு:** மாணவப்பருவத்துடன் விளையாட்டில் உள்ள தமது ஆர்வத்தை இடைநிறுத்தாது சுய ஒழுக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்வியல் மற்றும் வணிக ரீதியாக செயற்படக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்கல்...
கிராமம் முதல் நகரம் வரை விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் மையத்தினை (உ-ம்: மைதானங்கள்) ஏற்படுத்துவதன் மூலம் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தல்...

**கலை-கலாசாரம்:** எமது கலைச்செயற்பாடுகளை தொடர்ந்து நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீள் உருவாக்கம் என்ற அடிப்படையில் கட்டமைத்து தமிழர் பரப்பின் அடையாளமாக மாற்றியமைத்தல். மேலும் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தையும் எமது கலைகளையும் சர்வதேச மட்டம் வரை எடுத்துச் செல்லல்...
தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல்...

**சுயேச்சை வேட்பாளர்**
பேரினவாதத்திற்கும், தமிழர் பரப்பில் உள்ள கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே எனது அரசியல் பிரவேசம். அறவழியில் சுயவிருப்பத்துடன் தேர்தல் களத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து அம்ச ஆளுமையுடைய எனது வருகை மாற்றத்தை நோக்கி, மாற்று சிந்தனையுடன், மாற்று வழியில், மாற்றத்திற்கான நம்பிக்கை...

களத்தில் கமல்

**"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்"**

மாற்றத்திற்கான நம்பிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2025

கிழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2024 டிசம்பர் 31ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருட்கள் காகிதாதிகள்**

1.1 எழுதுபொருட்கள், காகிதாதிகள்.(Stationary, Calculator, Toner, Cartridge, Printer Ribbon, Printer paper, etc…)

1.2 வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.

1.3 சுகாதார சேவை வழங்கல்:- தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், கழிப்பறை சுத்தம் செய்யும் பொருட்கள், பாத்திரம் சுத்தம் செய்யும் பொருட்கள், சுத்திகரிப்பு மற்றும் மெருகூட்டல் பொருட்கள் முதலியன.

1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2.புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**

2.1 அச்சிடுதல், புளொக்செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.

2.2 புத்தகங்கள், பருவ வெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.

2.3 புத்தகங்களையும், பருவ வெளியீடுகளையும் கோர்த்தல்.

**3.தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்.**

3.1 அலுவலக தளபாடம் - மரம், உருக்கு–கணினி மேசை, கதிரைகள்.

3.2 அலுவலக உபகரணங்கள் (பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).

3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.

**4.கட்டட பொருட்கள்/ பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**

4.1 சகல வகையான கட்டட நிர்மாண பொருட்கள்.

a. சகல வகை தீந்தைகளும், துரிகைகளும், கலப்பான் வகைகளும் அது தொடர்பான ஏனைய பொருட்களும்.

b. சிமெந்து வகைகள், மாபிள் ஒட்டும் சிமெந்து வகைகள், நீர் கசிவு சிமெந்து வகைகள்.

c. கட்டட நிர்மாண வேலைகளுக்கான மணல், சல்லிகள், கற்கள் மற்றும் கிரவல் வகைகள்.

d. இரும்பு கம்பிகள், கல்வனைஸ் பைப்புகள் மற்றும் ஆணிகள்.

e. இரும்பு மற்றும் பித்தளையிலான கட்டட பொருத்துக்களும் பிணைப்புக்களும் பூட்டு வகைகளும். (பிணைச்சல், திறாங்கு, Screw ஆணிகள் போன்றவை)

f. UPVC/CPVC யிலான பைப்பு வகைகளும் அவற்றிற்கான பொருத்துக்களும்.

g. தீராந்தி வகைகள், சலாகை வகைகள் மற்றும் பலகை வகைகளும்.

h. அனைத்து அலுமினிய சட்டங்கள், மற்றும் பொருத்துகள், கண்ணாடிகள், ஒட்டுப்பலகைகள்.

i. குளியலறை மற்றும் கழிப்பறைகளுக்கான மாபிள் பொருத்துகள், சுவர் மற்றும் தரைகளுக்கான மாபிள்கள்.

j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.

k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.

l. நீர் கசிவு தடுப்பு மற்றும் துருப்பிடித்தல் தடுப்பு இரசாயன பொருட்கள்.

**5.மின்னியல் பொருட்கள்**

5.1 மின்சாதன பொருட்கள், உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்கள்.

**6.ஆய்வு கூட பொருட்கள்/சாதனங்கள்.**

6.1 ஆய்வுகூட சாதனங்கள்

6.2 ஆய்வுகூட இரசயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7.வாகன பராமரிப்பு**

7.1 டயர், ரியுப்புகள், பற்றரிகள்.

7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.

7.3 மோட்டார் வாகனம் திருத்துதல் 7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.

**8.பொதுச்சேவைகள் வழங்கல்கள்**

8.1 ஆயுள் வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்

8.2 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்.

8.3 புடைவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.

8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயன கருவிகள், இயற்கை உரம் பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.

8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணினி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.

8.6 உருக்கு, மரத்தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.

8.7 கதிரைகள் பின்னுதல்.

8.8 உடைகள், கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.

8.9 உடைகளைச்சலவை செய்தல்.

8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.

8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.

8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.

8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.

8.14 உணவு வழங்கல் சேவை.

8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.

8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.

8.17 பயண முகவர் சேவை.

8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.

8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)

**9.எந்திரவியல் சேவைகள்.**

9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்.

9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள் திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட.

9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.

9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.

9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள். கட்டடங்கள், வீதிகள், ஏனைய நிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.

9.6 மின்சார இணைப்பு வேலைகள்.

9.7 நீர் விநியோக தொகுதி, வடிகாலமைப்பு தொகுதி, கழிவுநீர் சீராகி தொகுதி மற்றும் குடிநீர் சீராகி தொகுதி வேலைகளும், பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளும்.

9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.

9.9 கட்டடங்கள் /கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.

9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.

9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் / பொருத்துதல் / தச்சுவேலை.

9.12 எந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.

9.13 கறையான் / பீடைகள் ஒழிப்புவேலைகள்.

9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா, மற்றும் காவலாளிகள்)

9.15 பராமரிப்பு வேலைக்கான கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்.

9.16 தீயணைப்பு இயந்திர தொகுதி பராமரித்தலும் திருத்த வேலைகளும்.

**10. மின்னணு பொருட்கள.**

10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.

10.2 தகவல் தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.

10.3 தொடர்பாடல் சாதனங்களுககான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.

10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்கதொலைபேசிகளும் வழங்கல்.

10.5 கணினிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

**பதிவு தொடர்பான நியந்தனைகள்**

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2025"**எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

   * பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.

2. ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 850000390000926 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சிட்டின் பிரதியை இணைக்கவும்.

3. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவு பத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் / சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொதுதன்மையுடன் தொடர்பற்ற வழங்கல் / சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4. 2025ம் ஆண்டிற்கான சகல விலைமனுக்களும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் பதிவு செய்யப்படாத வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு அதிகாரம் உண்டு.

5. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள் / சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற்றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்கு மட்டும்)

7. சேவைகள்/ வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் திவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கிக் கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்-II) இனைத் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல. 0212226519.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

**வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2025**

**01. தனிப்பட்டதகவல்கள்**

1.1 முழுப்பெயர் : ……………………………………………

1.2 தே.அ.அ. இல : ……………………………………………
(தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)

1.3 விலாசம்: ……………………………………………

1.4 நிரந்தரதொலைபேசி இல:……………………கைத்தொலைபேசி இல:……………………
தொலைநகல்:……………………

1.5 மின்னஞ்சல் முகவரி ……………………………………………

**02. வியாபாரதகவல்கள்**

2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:……………………………………………

2.2 வியாபார பதிவு இல:……………………………………………
(வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)

2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:……………………………………………
(VAT இலக்கம் காணப்படின், பெறுமதிசேர் வரி (ஏயுவ்) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும். CIDA பதிவு இலக்கம்……… தரம் ………… காலாவதி திகதி ……………

2.4 விலாசம்: ……………………………………………

2.5 நிரந்தர தொலைபேசி இல:……………………கைத்தொலைபேசி இல:……………………
தொலைநகல் :……………………
(குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)

2.6 மின்னஞ்சல் முகவரி:……………………………………………

2.7 மாவட்டம்:……………………………………………

2.8 பிரதேசசெயலர் பிரிவு:……………………………………………

**03. மேலதிகவிபரங்கள்**

3.1 வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் :……………………………………………

3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :……………………………………………

3.3 ICTADபதிவு இல :……………………………………………
(எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTAD பதிவு இல்லாதுவிடின் ரூபா 200.000.00 (இருநாறுஆயிரம் மட்டும்) க்கு உட்பட்ட வேலைகளுக்கான கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.

**04. வழங்கல் சேவைகளுக்கான விபரங்கள்.**

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
| --- | --- |
| | |
| | |
| | |

**05. வழங்கப்படும் பொருட்கள் வழங்குநராலேயே பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்**
நான்/ நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :…………………………

பெயர் :………………………………… திகதி :…………………………

**ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவவொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 850000390000926 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.**

(cr.43571) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.


**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

## ஏட்டாம் ஆண்டு நினைவு

தோற்றம்
27 - 07 - 1941



மறைவு
01 - 11 - 2016

**அமரர் கந்தையா இராசேந்திரம்**

(ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்)

அப்பா என்றாலே அமிர்தம்தானே
அப்பா என்றாலே வெளிச்சம்தானே
ஆகாயம் கூட தலைசாயும்
எம் அப்பா தலை நிமிர்ந்து பார்த்தால்
எத்தனையோ உறவுகள் எம்முடன் இருந்தாலும்
அத்தனைக்கும் உசத்தி அப்பாதானே
ஆயிரம் இடத்தில் தேடிவிட்டோம்
கண்ணீர் விட்டு கதறிவிட்டோம்
மண்ணுலகை விட்டு மறைந்த நீங்கள்
எம் நெஞ்சை விட்டு என்றுமே அகலமாட்டீர்கள்.

கலைமாமணி வீதி,
கட்டைப்பிராய்.

குடும்பத்தினர்

## பணியாளர் தேவை

கம்பஹாவில் இயங்கும் பிரபல ஹொட்டலிற்கு ரைஸ், கொத்துரொட்டி மற்றும் சிற்றுண்டி உணவு வகைகள் தயாரிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.
சம்பளம் நாள் ஒன்றிற்கு - 3500/-
அனுபவம் வாய்ந்த உணவு பரிமாறுபவர், பொதிகள் செய்யக்கூடியவர்கள் தேவை.
நாளொன்றிற்கு சம்பளம் - 1600/-
உடன் தொடர்பு கொள்ளவும்.

**071 222 0999**

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவைப்படுகிறார்கள். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். உணவு தங்குமிட வசதியும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-

**076 345 3485, 077 780 3203**

(CS/29222) J-1

**The 71st Annual Festival of Carols**
**by the**
**Combined Choirs of**
**Schools and Colleges of the North**
**will be held at the St. John's College Hall**
**on Saturday 09th November 2024**
**at 4.00 p.m**
**Admission : By Hymn Sheet - Rs. 50/-**

## பெயர் மாற்றம்

வியாபாரிமூலை, பருத்தித்துறை எனும் முகவரியைச் சேர்ந்த ஆசீர்வாதம் அன்ரன் யோசப் தங்கராசா என்கிற எனது பெயரினை ஆசீர்வாதம் தங்கராசா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/28736) J-1 ஆசீர்வாதம் தங்கராசா

## வாடகைக்கு

திருநெல்வேலி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அறைகள் வாடகைக்கு உண்டு.

**076 759 8708**

(CS/1756) J-1

## வேலையாட்கள் தேவை

ஆலயம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

**077 935 0273**

(CS/29215) J-1

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/29219) J-1

## LANKA ALUMINIUM — சிரேஷ்ட முகாமையாளர்

### களஞ்சியசாலை (Senior Manager - Depot) யாழ்ப்பாணம்

நாங்கள் நீண்ட காலமாக நிறுவப்பட்ட கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனம், உலகெங்கிலும் உள்ள பல்வகைப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளுடன் ஒரு பன்னாட்டு நிறுவனத்துடன் இணைந்துள்ளது. நாங்கள் கட்டடக்கலை மற்றும் பிற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் உயர்தர அலுமினிய extrusions முதன்மையான உற்பத்தியாளர். இலங்கையில் எமது குழுவின் செயற்பாடுகள் கட்டடப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இருந்து கட்டடப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களின் வன்பொருள் (Builders Hardware), சோலார் பாகங்கள் (Solar Accessories) மற்றும் MDF பலகைகள் (MDF Board) உள்ளிட்ட பொருட்களின் வரிசையை உள்ளடக்கியது. உயர்ந்த தரம் மற்றும் அசைக்க முடியாத வாடிக்கையாளர் திருப்திக்கான அர்ப்பணிப்புடன் நாங்கள் ஒவ்வொரு முயற்சியிலும் முன்னணியில் நிற்கிறோம். யாழ்ப்பாணத்தில் ஒரு களஞ்சியசாலையை திறப்பதற்கும் அதன் பின்னர் பல காட்சியறைகளை திறப்பதற்கும் உத்தேசித்துள்ளோம்.

**தேவைகள்:**

- டிப்போவில் விற்பனை மற்றும் சரக்கு நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் 5 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள மேலாளர் தேவை. விற்பனைக் குழுவை நிர்வகிப்பதிலும், வியாபாரத்தை கென்வஸ் செய்வதிலும் அவருக்கு அனுபவம் இருக்க வேண்டும்.
- கட்டுமானத் தொழிலுக்கு ஹார்ட்வெயர் பொருட்கள் மற்றும் துணைக்கருவிகளை விற்பதில் அனுபவம் ஒரு சாதகமாக இருக்கும்.
- விற்பனைப் பணியாளர்கள் உட்பட ஒரு குழுவை அதன் திறனுக்கு ஏற்றவாறு நிர்வகிப்பதற்கான தலைமைத் திறன்.

**நாங்கள் என்ன வழங்குகிறோம்:**

- கவர்ச்சிகரமான சம்பளத் தொகுப்பு.
- தொழில்முறை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வாய்ப்புகள்.
- ஆதரவான பணிச்சூழல்.

உங்களிடம் மேற்கூறிய தகைமைகள் மற்றும் வாடிக்கையாளர் உறவுகளில் அனுபவம் இருந்தால், நீங்கள் எங்கள் குழுவில் இருக்க விரும்புகிறோம்.

**எப்படி விண்ணப்பிப்பது:**

உங்கள் விண்ணப்பத்தை தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாக asokat@lanka-aluminium.com என்ற முகவரிக்கு அனுப்பவும். தலைப்பு வரியில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும். இந்த விளம்பரம் வந்த 7 நாட்களுக்குள் விண்ணப்பங்கள் எங்களை வந்தடைய வேண்டும். உங்களுக்கு தொடர்பில்லாத இரண்டு நடுவர்களைச் சேர்க்கவும்.

**GENERAL MANAGER**
**LANKA ALUMINIUM INDUSTRIES PLC - 1ST FLOOR,**
**LAKSHMANS BUILDING**
**GALLE ROAD, COLOMBO 03. TEL:2577004/2589517/2**

## UK Immigration Consultancy

## Student Visa

Undergraduate and PostGraduate Degrees

No IELTS needed if you have O/L Credit pass for English
(IELTS தேவையில்லை க.பொ.த.(சா.தர)ப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தியடைந்தால் போதுமானது).

Places available for January intake

### Skilled Worker Visa

Only the visa applications
(Visa விண்ணப்பம் மட்டும் செய்து தரப்படும்.)

## UK Visa Refusals

All types of UK visa refusals ( visit visa, student visa, skilled worker visa, spouse visa)

We will introduce you to experienced lawyers based in UK to handle your:

- Admin Review
- Tribunal Appeal
- Judicial Review.

(அனைத்து வகையான Visa நிராகரிப்புகளுக்குமான AdminReview , Tribunal Appeal , Judicial Review செய்து தரப்படும்)

**Please contact : 0770191110**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## க.வை. சற்குணம்

(Chairman of City Sun Holdings (Pvt) ltd),
Founder of City Sun Hardware.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து
மிகுந்த வேதனை அடைவதுடன்
அவரின் குடும்பத்திற்கு எமது
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
நல்லூர் வீரமாகாளி அம்பாளை
வேண்டிநிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !!

பிறப்பு 02.06.1937 — இறப்பு 30.10.2024

துயர்பகிர்வோர்
**New Ram Construction**
263, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(CS/43394) J-1

(CS/1760) J-1

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14.09.1941 — மறைவு 28.10.2011





யாழ். காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர்
## சரோஜினிதேவி சிவஸ்கந்தா

[ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் –
இலங்கை தொலைத் தொடர்பு திணைக்களம்]

**திதி : 03.11.2024**

பென்னம்பெரிய மலை சரிந்து
பதின்மூன்று ஆண்டுகள்
கன்னங்களில் நீர் வழிய,
கன்னங்கரிய இருள் சூழ்ந்து
விண்ணுலாவும் நிலாவை
இன்னும் தான் தேடுகின்றோம் காணவில்லை
தன்னந்தனியே தனித்து நாமிருந்தாலும்
முன்னம் நீர் செய்த புண்ணியம்
எந்நாளும் எம்மைக் காத்திடும்
என்னதான் நடந்தாலும் சன்னம் தான்
துளைத்தாலும் அன்னையே நீரிருந்தால்
சின்னதாய் போய்விடும் சிலபிரச்சினைகள்
சொன்ன வார்த்தைகள் சொர்க்கம்தான் போனாலும்
பொன்னாய் எம் நெஞ்சில் பொறித்துக்கிடக்கிறது.
அன்னமூட்டி எம்மை அரவணைத்திட்ட
அன்பான தாயே ஆதரவு தேடி அழுகின்றோம்.

துன்பம் சூழ்கையிலே
துவண்டிடாமல் கண்ணாய் காத்திட்ட
கலங்கரை விளக்கே
கண்மூட முடியவில்லை கலங்குகிறோம் தாயே
உண்ணும் போதும் உறங்கும்போதும்
எண்ணும்போதும் முடியவில்லை
முடிவில்லா பயணமிது வண்ணமயமாய்
வாழ்ந்திட்ட காலங்கள்
எண்ணி நாமிருந்தாலும் இனியும் வந்திடுமோ?
புன்னகை தவழும் உங்கள் முகம்
எந்நாளும் இனி காணமுடியாதே
முன்னேறி நாம் வாழ்ந்திட
நன்னெறிகாட்டி நடந்திட்ட நல்லாளே
உன் வழி நாமும் தொடர்வோமே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(CS 1762) 1-A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சலுகைகளுக்கு விலைபோகாத கட்சியே மக்கள் முன்னணி!

## வேட்பாளர் சுகாஷ் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.3**

**பணப்பெட்டிகளுக்கும், சலுகைகளுக்கும், மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் விலைபோகாது ஒரே குறிக்கோளில் முன்னேறிச்செல்வது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளரும், ஊடகப்பேச்சாளருமான சுகாஷ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தத்தை நிராகரித்து இனம்சார்ந்த விடுதலை அரசியலை முன்னெடுத்து வருகின்ற ஒரே கட்சி நாம்.

தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து , எமது கட்சியை வடக்கு- கிழக்கின் தலைமைச்சக்தியாக அதிக ஆசனங்களோடு நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதுதான் தமிழினத்துக்குத் தீர்வையும், நிம்மதியையும், சிறந்த எதிர்காலத்தையும் பெற்றுக்கொடுக்கும்.

தமிழ்த்தேசியமக்கள்முன்னணியைத் தவிர ஏனைய கட்சிகள், ஒற்றையாட்சி, 13 ஆவது திருத்தம் மற்றும் ஏக்கியராச்சிய யாப்பு ஆகியவற்றை ஏற்பதற்கு எழுத்து மற்றும் வாய்மூலமாக சம்மதம் தெரிவித்துவிட்டன.

பணப்பெட்டிகளுக்கும், சலுகைகளுக்கும், மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் விலைபோகாது ஒரே குறிக்கோளில் முன்னேறிச்செல்கிறது.

எனவே மக்கள் சிந்தித்து எமக்கு வாக்களிப்பார்களாக இருந்தால் இனம் சார்ந்த நேர்மையான அரசியலை மேற்கொள்வோம் - என்றார். (ச-25)


பிரபல பத்தி மற்றும் சாம்பிராணி தயாரிப்பு நிறுவனமொன்றுக்கு “விநியோக முகவர்கள்” தேவை

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மன்னார்**

மூன்று தசாப்தங்களுக்கு மேலதிகமாக மக்களின் மத்தியில் சிறந்த வரவேற்புடைய எமது நிறுவனமானது, மிகப் பிரபலமான விற்பனை நாமத்தையுடைய ஊதுபத்தி மற்றும் சாம்பிராணி தயாரிப்புகளை உற்பத்தி செய்து சுப்பர் மார்க்கட்டுகள் உட்பட உள்நாட்டு சந்தைக்கும் சர்வதேச அளவில் ஏராளமான நாடுகளுக்கும் விநியோகிப்பதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியிலான பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப எமது நிறுவன விநியோகித்தல் வலையமைப்பினை விஸ்தரிக்கும் நோக்கில் பின்வரும் பிரதேசங்களிலிருந்து **‘விநியோக முகவர்கள்’** எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி காணப்படல்.
- விநியோக நடவடிக்கைகளுக்கு போதுமானளவு போக்குவரத்து வசதி காணப்படல். விநியோகித்தலுக்கு முன்னனுபவம் கொண்டிருத்தல்.
- இதன்போது வேறொரு தயாரிப்பையும் விநியோகிப்பின் அது தொடர்பிலான முழு விபரத்தையும் சமர்ப்பித்தல்.
- வங்கிப் பிணை வைப்பிலிட வேண்டும்.

மேற்குறித்த தகைமைகளையுடைய விற்பனையாளர்கள் சகல விபரங்களையும் மனோகரன் - 0774 810 267 மின்னஞ்சல் - thai.sumeda@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Lanka Sumeda (A proud product of... Thai Sumeda)

**தாய் சுமேதா எண்டர்பிரைசஸ் (தனி) நிறுவனம்**
**முகவரி: இல. 322 டீ, முதல் மாடி, NDB வங்கி, கோட்டை வீதி, பிட்டகோட்டை, ஸ்ரீ ஜயவர்தனபு.**
**மின்னஞ்சல் : thai.sumeda@yahoo.com**
**இணையத்தளம் : www.thaisumeda.com | www.lankasumeda.com**

# வாக்காளருக்கு விருந்தளித்தால் வேட்பாளர் மீது சட்டம் பாயும்!

கொழும்பு, நவ. 3

நட்சத்திர ஹோட்டல்களுக்கு வாக்காளர்களை அழைத்து அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வேட்பாளர்கள் உபசரிப்புகளை வழங்கினால் சட்டநடவடிக்கைக்கமைய அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் இரத்து செய்யப்படும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

வாக்காளர்களை மகிழ்விப்பதற்காக இவ்வாறான விடயங்களை செய்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் பதவிகள் இல்லாதொழிக்கப்பட்ட சம்பவங்கள் வரலாறு நெடுகிலும் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு வாக்காளர்களை மகிழ்விப்பது தேர்தல் சட்டத்தை அப்பட்டமாக மீறுவதாகும். பணம் இல்லாத மற்ற வேட்பாளர்களுக்கு இழைக்கப்படும் கடுமையான அநீதி என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)



# லொஹான் மனைவிக்கு பிடியாணை

கொழும்பு, நவ. 3

சொகுசு காரை உதிரிப்பாகங்களாக சேகரித்து மறைத்து வைத்த குற்றத்துக்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேவின் மனைவியும் கைது செய்யப்படவுள்ளதாக உயர்பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மிரிஹான தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள துஷாரவின் மேற்பார்வையில் இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ராஷி பாபா ரத்வத்தவுக்கு நுகேகொட நீதிவான் நீதிமன்றம் பிடியாணை அனுப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# டிஜிற்றல் மயமாக்கலினூடாக அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு

கொழும்பு, நவ. 3

டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தினூடாக அரிசி விலையை ஸ்திரப்படுத்தல் மற்றும் அரிசி தட்டுப்பாட்டுக்கு நீண்டகாலத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சமூக நலன்புரி வழங்கும் வேலைத்திட்டங்களை டிஜிற்றல் மயமாக்குவது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

அரிசி விலையை ஸ்திரப்படுத்தல் மற்றும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு நீண்ட கால தீர்வு காண்பதற்கு நெல் களஞ்சிய கட்டமைப்பை டிஜிற்றல் மயமாக்குவதன் முக்கியத்துவம் மற்றும் அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக நலன்புரித் திட்டங்கள் உள்ளிட்ட சேவைகளை டிஜிற்றல் மயமாக்குதல் குறித்து கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ள நிவாரண விநியோகத் திட்டம் மற்றும் உர மானியத் திட்டம் என்பவற்றை டிஜிற்றல் மயமாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, நவ.3

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு வித்தியாலய அரங்க மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய இரசாயனவியல் துறைத்தலைவர் கலாநிதி சுபாஜினி சிவகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன், சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் ஐ.தேவஈஸ்வரன், விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலம் மற்றும் விவசாயப் பீட வருகை விரிவுரையாளர் சிவப்பிருந்தா சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி-9,131)



## யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆவணப்படத் திரையிடல்

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு கால வரலாற்றின் ஆவணப்படம் யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர்களால் எழுத்துருப்பெற்று நெறியாள்கை செய்யப்பட்டு நடிக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு திரையிடப்பட்டது. (ரி-125)

## கந்தசஷ்டி விசேட பூசைகள்

யாழ்ப்பாணம், நவ. 3

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலய கந்தசஷ்டி விரத அபிஷேகப் பூசைகள் நேற்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமானது. (ச-45)

## மரநடுகை

வவுனியா, நவ. 3

'நாளைய தலைமுறைக்கான' என்ற தொனிப்பொருளில் வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை மரநடுகை நிகழ்வு இடம் பெற்றது.

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்பாக உள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அதில் மதத்தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-113)



### யாழ்.பல்கலை கலைப்பீடத்தால்

## கார்த்திகைப்பூக்கள் மரவளர்ப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 3

மரநடுகை மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் 'கார்த்திகைப் பூக்கள்' எனும் பெயரில் மரவளர்ப்புச் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

இதன் முதற்கட்டமாக யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலய வளாகத்தில் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சு.கபிலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், கலைப்பீட மாணவர்கள், யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் குறித்த மரநடுகை வைபவத்தில் கலந்துகொண்டனர்.

நிகழ்வு கார்த்திகையின் மகத்துவத்தை எமது அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நோக்குடன் செயற்படுத்தப்படுவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பிணக்குகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பிரச்சினைகள் ஏற்படும். விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். ஆதாயம் தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களிடம் வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சு சுமுகமாக முடியும். செலவுக ளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மா மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகள் பணிந்து போவார்கள். தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். சகோதர வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிரச்சினைகள் ஏற்படும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும் .

**கும்பம்:** குடும்பத்தில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.





## யாழில் தட்டம்மைக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், நவ. 3

நாட்டில் தட்டம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் வாரமாக அடுத்த வாரத்தை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நாளை திங்கட்கிழமை தொடக்கம் 9ஆம் திகதி சனிக்கிழமை வரை தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம்.

இதுதொடர்பிலான விழிப்புணர்வு கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இடம்பெறவுள்ளது.

குறிப்பாக 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்படுவதால் இதனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-45+17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## றஞ்சித் ஞானப்பிரகாசம் றீற்றா வரோணிக்கா (சறோ)

இல. 19, புதுவீதி கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட றஞ்சித் ஞானப்பிரகாசம் றீற்றா வரோணிக்கா (சறோ) கடந்த 31-10-2024 வியாழக்கிழமை இறைவனடியில் நித்திய இளைப்பாற்றியடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பெஞ்சமின் - மேரிபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - மேரிமாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், புளோரன்ஸ், பிரான்சிஸ் (வித்தி), அருட்தந்தை பேனாட் (பிரான்சிஸ்கன் சபை), ஸ்ரிபன் ஞானசேகரம், காலஞ்சென்ற றஞ்சினி, மற்றும் சந்திரசேகரம், சாந்தசேகரம், றஞ்சசேகரம், விஜயசேகரம், உதயசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அன்ரனி மரியதாஸ், கொன்சன்ரைன் தேவதாஸ் ஆகியோரின் மைத்துனியும், கிறிஸ்லின், ஶ்ரீயித்குமார் (உளநலப்பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை), மரிய யூலியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பீருஸ், தர்சினி, தனுசுயா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஈசாம், டின், ஈசாக், மேரியாம், மேரிஷனா, அஸ்விதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04-11-2024) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல. 19, புதுவீதி கொய்யாத்தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இறுதி இரங்கல் ஆராதனை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
077 711 1048 / 021 222 9634

(CS/1757) N-1


# ஊழலற்ற தேசம் வேண்டும்

## வேட்பாளர் உதயராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 3

வன்னியை ஊழலற்ற தேர்தல் தொகுதியாக மாற்றிக் காட்டுவதற்கு மக்கள் ஆணை வழங்க வேண்டும் என ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் ப.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் வன்னித் தேர்தல் தொகுதியில் ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றோம்.

கடந்த முறை தேர்தல்களில் நாம் சொற்ப வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டோம். இம்முறை நாம் வெல்வோம் என தெரிந்த நிலையில் எமது வேட்புமனு சதியால் நிராகரிக்கப்பட்டது.

வன்னியை ஊழலற்ற தேர்தல் தொகுதியாக மாற்றி காட்டுவோம். ஏனைய மாவட்டங்கள் எமது வன்னியை திரும்பிப் பார்க்கும் அளவுக்கு எங்களது வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம். வன்னியின் மக்களின் குரலாக ஒலிப்போம் - என்றார். (ச-18)


### மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு (மிருகசீரிடம்) பிறந்த லண்டன் பிரஜா உரிமை உள்ள தாரமிழந்த பிள்ளைகள் அற்ற மணமகனுக்கு (V) மணமகள் தேவை.
பி.கு - மணமகன் இந்தவாரம் இலங்கை வருகிறார்

(CS/1761) J-1

077 983 9288, 077 662 1884

### காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையாக கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு பின்புறமாக 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நல்ல குடியிருப்புச் சூழல்
- நன்னீர் கிணறு
- இருபாலை கோண்டாவில் வீதி 100M

உரிமையாளர் தொடர்புகளுக்கு :
077 349 9465

(CR/43347) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1954



மறைவு 01 . 11 . 2024

## மாணிக்கன் நடேசன்

புத்தூர் மேற்கை பிறப்பிடமாகவும், புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கன் நடேசன் நேற்றுமுன்தினம் (01.11.2024) வெள்ளிகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயகுமார், தேவகுமார், ஜெசிந்தகுமார், சுரேஸ்குமார், ஜெனிதா, ஜெசிந்தா, ஜெசிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குலன், யசிந்தகுமார், நிசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், குமாரசாமி, கமலாதேவி, விஜயலட்சுமி, ராங்கநாதன், காந்திமதி, சிவக்கொழுந்து, லங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பொன்னன் சேதுப்தி, காலஞ்சென்ற கதிரமலை மற்றும் கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், இராசேந்திரம் மற்றும் இந்திராணி, யோகராணி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் சிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கபிலாஸ், அருள்ராஜ், கரீசன், கரீசு, கனிஸ்ரன், சஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் மேற்கு கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
076 255 6403, 076 919 8988

தகவல்:
குடும்பத்தினர்

(CS/29216) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1946



மறைவு 30 . 10 . 2024

## சின்னத்தம்பி சின்னத்துரை (ஐயாத்தம்பி)

மந்துவில் வடக்கு கொடிகாமத்தினைப் பிறப்பிடமாகவும், கொயிலாமனை கொடிகாமத்தினை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை (ஐயாத்தம்பி) கடந்த (30.10.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி - பகீரதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், கதிர்காமநாதன் (ஆசிரியர் - இடைக்குறிச்சி ஶ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்), கோகுலநாதன் (கனடா), கோகுலமதி (ஜேர்மனி), கோகுலவதனி, கோகுலவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகேஸ்வரி (ஆசிரியர் - யா/குடமியன் அ.த.க.பாடசாலை), வனஜா (கனடா), குபேந்திரன் (ஜேர்மனி), சிவறதீஸ் (அதிபர் - மயிலிட்டி ஞானோதயா வித்தியாலயம்), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஸ்தூரிகா, கனுசிகன், யஸ்மிகா, யஸ்னுத், யதுமிகன், கிருஸ்டிகன், மதுக்ஷா, அபிசாயினி, சங்கீத் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், கந்தையா, சுப்பிரமணியம் மற்றும் அன்னப்பிள்ளை, கனகம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனம்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொயிலாமனை,
கொடிகாமம்.

(CR/43585) J-1

தகவல் :
குடும்பத்தினர்
077 614 3780


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் தாக்குதலில் 11 பேர் பலி

கீவ், நவ. 3

உக்ரைனின் கீவ் மற்றும் கார்கிவ் நகர்களில் ரஷ்யாவால் நேற்று மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் தாக்குதல்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். கடுமையான சேதங்களும் ஏற்பட்டுள்ளன. (ம)


## விற்பனைக்கு

நாவற்குழியில் 28 பரப்பு, கந்தர் மடத்தில் 2 பரப்பு, வான் விற்பனைக்கு.

தொடர்பு: 077 772 2215

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.

ஒரு சதுர அடி - 65 ரூபா

நிலம் இழுத்துப் பதிக்க - 90 ரூபா

077 334 1281

(CS/28737) J-1

## ஆட்கள் தேவை

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ்காணும் ஆட்கள் தேவை.

- Computer Billing + Cashier
- Sales Assistant (உதவியாளர்)
- Delivery Boy
- Driver (வாகன சாரதி AD)

வயது எல்லை 18 - 35, யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

077 419 5209, 077 419 5015

(CS/1763) J-1

## விசா ஆலோசனை சேவைகள்

ஜேர்மனி, இத்தாலி, France நாடுகளுக்கான உடனடி விசா ஆலோசனை சேவைகள், Tourist Visa, Documentation, Bank Balance வசதிகள் ஒழுங்கு செய்துதரப்படும்.

தொடர்பு:- 072 833 5272

(CR/43590) J-1

## பாராளுமன்ற தேர்தல் 2024

### தேர்தல் மாவட்டம்
### யாழ்ப்பாணம்



7

தொழிலாளர்கள், வணிகர்கள், பொதுமக்கள் நலனில் அதிக அக்கறை கொண்டு கடந்த 34 வருடங்களாக அரச சேவையான தொழில் திணைக்களத்தில் அர்ப்பணிப்புடன் ஊழலற்ற உயர் பணிபுரிந்தவர். இவரின் நேர்மையான சேவை மேலும் மக்களுக்கு கிடைக்க வாக்களித்து வெல்லவைப்போம்.

பொது வேட்பாளர்

திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்

(சட்டத்தரணி, முன்னாள் மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம்)

தமிழ் தேசிய சக்தி

TAMIL NATIONAL POWER (TNP)

தமிழர் சம உரிமை இயக்கம்

THAMILAR SAMA URIMAI IYAKKAM

## பழைய வீடு விற்பனைக்கு உண்டு

தெகிவளையில் மாதம் ஒருலட்சம் வாடகை தரக்கூடிய 15 பேர்ச் காணியில் அமைந்துள்ள பழைய வீடு விற்பனைக்கு உண்டு.

1 பேர்ச் - 49 லட்சம்

071 484 0610

(CR/43589) J-1

## வீடு வாடகைக்கு உண்டு

ராஜா கிறீம் ஹவுஸ் அருகில் கலட்டி சீனியர் வீதி பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.


077 434 8068

(CS/56422) J-1


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 07 . 06 . 1943 | | 01 . 11 . 2024 |



### இரத்தினம் தங்கராசா (வெள்ளை)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் தங்கராசா அவர்கள் நேற்று முன்தினம் (01.11.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், செங்கமலம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான றோசம்மா, பாக்கியலட்சுமி, கந்தசாமி, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணேசன், மதியாபரணம் (பத்தர்), தர்மராஜா (பத்தர்), தங்கரத்தினம், மகாதேவன், பரமேஸ்வரி மற்றும் குலமணி, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 716 6492

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு, கல்வியங்காடு.

(CS/29229) J-1


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 153 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே

- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம் - காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை


**தொடர்பு: ஜெயம்**

**077 8147 389**

**077 986 5457**


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 07 . 03 . 1939 | | 01 . 11 . 2024 |



### அருணாசலம் சண்முகம்

சாவகச்சேரி வடக்கு மடத்தடி கிழக்கு வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சண்முகம் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.11.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - கனகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சற்குணம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளம்மா, தியாகராஜா மற்றும் அரசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், புலேந்திரலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, லோகநாதன், தயாநிதி, குமாரசாமி ஆகியோரின் மைத்துனரும், விக்கினேஸ்வரன் (ஆசிரியர் - யா/ மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாலயம்), கருணாகரன் (உதவி அதிபர் - வ/ நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் - வவுனியா), பிரபாகரன் (சுவிஸ்), கலஞ்சென்ற சியாமளா (இத்தாலி) மற்றும் மைதிலி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தினி (ஆசிரியர் - யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை), பிரியா, கேதாரகௌரி (சுவிஸ்), ரமேசன் (சுவிஸ்) ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குருஷோத்மன், ரஸ்மினி, ஆஜிசன், அபிசன், ஆஜிஷா, அஜந்தன் - கம்சியா (சுவிஸ்), பிறின்சியா (சுவிஸ்), கனிஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 518 4324, 077 005 5183

(CR/43587) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய நீக்கத்தை மக்கள் அனுமதிக்கக்கூடாது

## சசிகலா கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 3

தமிழ் தேசியத்தை புறக்கணிக்கும் கட்சிகள், சுயேச்சை குழுக்களை மக்கள் நிராகரிக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் கோரிக்கை விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளின் கூட்டில்தான் நான் இணைந்துள்ளேன். எனது கணவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்த வேளையே படுகொலை செய்யப்பட்டார். கடந்த 2020ஆம் ஆண்டில் தமிழரசு கட்சி சார்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பில்தான் போட்டியிட்டேன். அதன் அடிப்படையில் இந்த முறை தேர்தலிலும் தமிழரசு கட்சி ஆசனம் வழங்கும் என எதிர்பார்த்து இருந்தேன். எனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது.

பெண்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய நான் தோற்றுப்போனவளாக இந்த தேர்தலில் இருந்து விலகி இருக்க விரும்பவில்லை. அப்போது தான் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்றுக் கொண்டேன்.

பெண்களுக்காக உங்கள் முன் நிற்கும் என்னை தெரிவுசெய்ய வேண்டும். பெண்கள் மிக ஆழமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும். தமிழ்த் தேசியத்தை புறக்கணிக்கும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் - என்றார். (ம-20-26)

# அரசசொத்துமுறைகேடு 1997க்கு அறிவிக்கலாம்

கொழும்பு, நவ.3

அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்துகளைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துதல், கடத்திச்செல்லல் அல்லது மறைத்துவைத்திருத்தல் ஆகியவை தொடர்பில் முறையிட 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

1997என்றஅவசரதொலைபேசிஇலக்கமானது 24மணிநேரமும்சேவையில்இருக்கும். இந்த அவசர தொலைபேசி இலக்கத்தின் மூலம் பொலிஸ் அதிகாரிகளினால் இடம்பெறும் மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல் குற்றங்களையும் முறையிட முடியும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச)

## இன்னொரு...

வடமாகாண ஆளுநர் வேதநாயகனுக்கும், யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் பலாலியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பலாலி உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வீதிகள், காணிகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, பலாலியில் விரைவில் பிறிதொரு விடுவிப்பு இடம்பெறச் சாத்தியம் உள்ளதாகத் தெரியவருகின்றது.

தனது பயணத்தின் நினைவாக, பலாலி இராணுவ முகாமில் ஆளுநர் மரக்கன்றுகளை நட்டதுடன், நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்ட வீதியையும் பார்வையிட்டுள்ளார். (அ-ம-66)

## மதுபோதையில்...

பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இரவுவேளையில் கடைகளுக்கு முன்னால் ஏராளமான பெண் யாசகர்கள் உறங்கும் நிலையில், அவர்களில் பலர் மதுபோதைக்கு அடிமையானவர்கள் என்றும், தமது பிள்ளைகளைப் பயன்படுத்தியும் துன்புறுத்தியும் யாசகம் எடுத்துவிட்டு அந்தப் பணத்தை அடாத்தாகப் பறித்து மதுபானத்தைக் கொள்வனவு செய்து பருகுகின்றனர் என்றும் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த யாசகர்களைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாணம் மாநகர சபை முறையான நடவடிக்கைகள் எதையும் எடுக்காதமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## இலங்கையின்...

அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போதே, இலங்கையின் கல்வியை மேம்படுத்த ஜேர்மனி முழுமையான உதவிகளை வழங்கும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கல்வித்துறையை அபிவிருத்தி செய்வதுடன் நின்றுவிடாது, தொழிற்பயிற்சியை மேம்படுத்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் செயற்கை நுண்ணறிவுசார் திட்டங்களை பலப்படுத்தல் உள்ளிட்ட துறைகளிலும் இலங்கைக்கு ஜேர்மனி உதவும் என்றும் ஜேர்மனியின் தூதுவரால் பிரதமர் ஹரிணியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் தூதரக அதிகாரிகள் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகள் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலின்போது உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## முறைப்பாடு...

அத்துடன் தேர்தல்கள் வன்முறை தொடர்பில் 14 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ-ம)

## வாக்காளர்...

கங்கள் இன்றையதினம் திறக்கப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. 7 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காவிடில் இதுதொடர்பாக அருகிலுள்ள தபால் நிலையத்தில் வினவுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-66)

## கோடிக்கணக்கில்...

முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், ஜூலை மாதம் ஒருவரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அதன்போது, இந்தக் குற்றச்செயலில் சிலர் குழுவாக ஈடுபட்டமை தெரியவந்தது.

இதையடுத்து, பிறிதொரு சந்தேகநபர் கடந்த ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகி உள்ளமை தெரியவந்துள்ளது. தொடர்ச்சியான விசாரணைகளின்போது, அந்த நபர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளைப் பிரிந்து வாழ்வதாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிட்டு, இரவு நேரத்தில் அவர்களைச் சந்தித்துவிட்டுச் செல்வதாகவும் பொலிஸாருக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதையடுத்து கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு வேளையில், அவருடைய வீட்டைச் சுற்றிவளைத்தபோதே பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபருக்க எதிராக வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதவான் நீதிமன்றங்களில் பல்வேறுபட்ட மோசடி வழக்குகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-20)

## விபத்தில்...

பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீதி விபத்துகளில் உயிரிழந்தவர்களில் 676 பேர் பாதசாரிகளாவர். ஆயிரத்து 818 வீதி விபத்துகளில் 730 மோட்டார் சைக்கிள் விபத்துகளும், 209 முச்சக்கரவண்டி விபத்துக்களும், 258 லொறி விபத்துக்களும், 146 பஸ் விபத்துகளும், 118 சிறிய ரக வாகன விபத்துகளும் அடங்குகின்றன. மேலும், 42 வாகனங்களின் சாரதிகள் விபத்துகளை ஏற்படுத்தி தப்பிச் சென்றுள்ளனர். எனவே, வீதிகளில் பயணிக்கும் பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் - என்றார். (அ-ம)

## 13 ஆவது...

விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம்பெற்றது. இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே 13ஆவது திருத்தம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் சாரம் சமாவது:-

இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு. அரசிடம் அல்ல என இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதியாக வலியுறுத்துகின்றது. தமிழ்மக்களை ஆளுகின்ற உரிமை கொழும்பிலிருக்கும் அரசாங்கத்திடம் அல்ல, தமிழ் மக்களிடமே பொதிந்திருக்கின்றது. இதனடிப்படையில் மத்திய அரசிடமும், அதன் முகவரான ஆளுநரிடமும் அதிகாரங்களைக் குவிக்கின்ற 13ஆம் திருத்தச் சட்டம் முற்றிலும் பிழையானதொன்று.

இலங்கை நாடு ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் குடியியலுரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்திலும், பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சாசனத்திலும் அடங்கியிருக்கும் விதிகளின் பிரகாரம் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான மக்கள் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்.

முன்னர் இருந்தவாறு ஒன்றுபட்ட வடக்குகிழக்கு அலகைக்கொண்ட சமஷ்டிக் கட்டமைப்புக்குள்ளே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது வடக்குக் கிழக்கில் வாழும் எந்த ஒரு மக்கள் மீதும் எவ்வித முரண்பட்ட தாக்கத்தையும் ஏற்படுத்தா வண்ணம் இருத்தல் அவசியம் - என்றுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வுக்கு (விழா) முன்னர், கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் வைத்து விஞ்ஞாபனம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. இதன்போது, மாவை சேனாதிராஜா கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்திடம் தேர்தல் விஞ்ஞாபனத்தை கையளித்து, உத்தியோகபூர்வமாக அதனை வெளியீடு செய்து வைத்தார். (அ-ம-113-66)

## ஜனநாயக...

இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியில் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பிரச்சினை ஏற்பட்டிருப்பது அரசாங்கத்தினால் அல்ல, ஊடகங்களால் தான் என ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்திருக்கிறார். பழைய அடிமைத்துவத்தைக் கைவிட முடியாத சில ஊடகங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார். இந்த கதையைச் சொல்வது யார்? அழுக்கான ஆடையை கைவிட்டு ஜனநாயகத்துக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணியே ஆகும் - என்றார். (அ-ச-இ)

## அறுகம்குடா...

பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பத்தில் இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், தொடர்ச்சியான விசாரணைகளின் அடிப்படையில் ஏனையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வினாத்தாள் கசிவைத் தடுக்க

# அறிமுகமாகின்றது வினாத்தாள் வங்கி

**கொழும்பு, நவ. 3**

**வினாத்தாள் கசிவைத் தடுக்க புதிய பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.**

அதன்படி, தேர்வுத் தாள்கள் கசிவதைத் தடுக்க வினாத்தாள் வங்கியொன்று ஏற்படுத்தப்படும். இந்த வினாத்தாள் வங்கியை 2026 ஆம் ஆண்டுக்குள் நிறுவ முடியும் என்றும், இதனால் பரீட்சைக்கு முன்னதாக வினாத்தாள்கள் கசிவதைத் தடுக்க முடியும். இந்த புதிய முறையின் கீழ் வினாத்தாள்கள் தயாரிக்கும் பணியை மனித ஈடுபாட்டுக்கு பதிலாக கணினி மூலம் மேற்கொள்வதன் மூலம் பரீட்சை வினாத் தாள்களை பாதுகாப்பாகவும் வைத்திருக்க முடியும். வினாத்தாள் வங்கி ஊடாக புதிய தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



# சாதனை நடைபயணம்

கிளிநொச்சி, நவ.3

சாதனையொன்றை நிலைநாட்ட வேண்டும் எனும் நோக்கில் கிளிநொச்சி, கோணாவில் பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய முரளிதரன் டியோஜன் எனும் சிறுவன் நாடளாவிய ரீதியாக நடைபயணத்தை மேற்கொண்ட நிலையில் மன்னார் - சங்குப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணம் வருகைதந்து அங்கிருந்து பருத்தித்துறை நகரைச் சென்றடைந்த நிலையில் மருதங்கேணி பகுதியை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வந்தடைந்தார். இந்தநிலையில் கிளிநொச்சி நகரில் நேற்று சனிக்கிழமை 11 மணிக்கு பயணம் நிறைவடைந்தது. (ரி-27)

# காசோலை கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் மாவட்ட ப.தெ.வ.அ. கூ. ச.நிர்வாகப் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்ட அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு பணியாளர் நலம்புரி கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி. நிர்மலன் தலைமையில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கூ.அ.உதவி ஆணையாளர் கி.சந்திர சேகரன் முதலாம் பரிசுக்கான 50ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை வழங்கி வைத்தார். நிகழ்வில் சமாசத் தலைவர் செ.செல்வராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டதுடன், சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-45-63)



பாராட்டி வாழ்த்துகின்றோம்




இலங்கை மட்டத்தில் இடம்பெற்ற ஆய்வாளர்களுக்கான (PhD.mphil. DBA) போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர்

திருமதி
**டினோசா சுஜிந்தர்**
**சாதனை**

களனிப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வணிகம் மற்றும் தகவல் தொடர்பான 15 ஆவது சர்வதேச மாநாடு (ICBI) 2024 இன் ஒரு பகுதியாக நடாத்தப்பட்ட மூன்று நிமிட ஆய்வறிக்கை (3MT) போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி டினோசா சுஜிந்தர் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியானது கடந்த 01.11.2024 வெள்ளிக்கிழமை Pegasus Reef Hotel. Wettala இல் இடம்பெற்றதுடன், விரிவுரையாளர் திருமதி டினோசா சுஜிந்தர் "யாழ்ப்பாண சமுதாயத்தின் 1658 - 1675 வரலாற்றை டச்சு ஆவணங்களின் ஊடாக கண்டறிந்து எதிர்கால தலைமுறைகளுக்கும், எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கும் அவ் ஆவணங்கள் எவ்வாறு துணைபுரிகின்றன" எனும் தொணிப்பொருளில் இவ் Presentation இனை முன்வைத்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு இலங்கை மதிப்பு தொகை 75,000 /= வும், கேடயமும், சான்றிதளும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். The University of Queensland, Australia வின் அனுசரனையுடன் இடம்பெற்றதுடன் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் யாழ்ப்பாண தமிழ் விரிவுரையாளர் வெற்றி பெற்றிருப்பது சர்வதேச தளத்தில் தமிழருக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றி ஆகும்.

(cs 29217)(N-1) **வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.**



# தமிழ்ச்செல்வன் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ. 3

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கட்சியின் பொருளாளர் தீபன் திலீசன் தலைமையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்.கொக்குவிலிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தமிழ்ச்செல்வனின் உருவப் படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி திருமதி வாசுகி சுதாகரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-66)

வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெண் வேட்பாளர்களான யசோதினி கருணாகரன், வன்னி மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் ஆகியோர் அண்மையில் யாழ்.மறை மாவட்ட ஆயரைச் சந்தித்தனர். (ச-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஈதல் இசையாது இளமைசேண் நீங்குதலால்
காத லவரும் கருத்தல்லர்; — காதலித்து
ஆதுநாம் என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

—நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஐப்பசி 17 | ஞாயிற்றுக்கிழமை (03.11.2024) | சிகரம் :226



வல்லைப் பாலம் பல வருட வரலாற்றைக் கொண்டது. முதலில் கொங்கிறீட் பாலமே இருந்தது. சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் தான் இது இரும்புப்பாலமாக மாற்றப்பட்டது. பாலத்தின் கட்டுமானப்பொருட்களின் மேற்பரப்பில் ஏற்படுகின்ற தேய்வுதான் இன்றுள்ள மிக முக்கியமான சிக்கல் ஆகும்.

# வழுக்கும் வல்லைப் பாலம்;



# எப்போது நீங்கும் ஆபத்து?

முருகையா தவக்குமார்

*ஊடகக் கற்கைகள் மூன்றாம் ஆண்டு,*
*யாழ். பல்கலைக்கழகம்*

மக்களை இணைப்பதிலும் போக்குவரத்தை எளிதாக்குவதிலும் பாலங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இருப்பினும், ஒரு பாலத்தின் வடிவமைப்பு மற்றும் பராமரிப்பில் குறைபாடுகள் இருந்தால், அது எதிர்பாராத ஆபத்துகளுக்கு வழிவகுக்கும், அந்த வகையில் யாழ்ப் பாணம், வடமராட்சியின் வாசலாக உள்ள வல்லை பாலம் மழைகாலத்தில் அதிகமாக வழுக்கும் தன்மை யுள்ள ஒரு இரும்புப் பாலமாக உள்ளது. யாழ். நகரில் இருந்து பருத்தித்துறை பிரதான வீதியில் 19.6 கிலோ மீற்றர் தூரம் பயணித்த பின்பு இந்தப் பாலத்தைக் காணலாம். இந்தப் பாலத்தின் வழுக்கும் தன்மை, பல விபத்துகளுக்கு காரணமாக இருப்பதோடு, உயிரிழப்பு களையும் ஏற்படுத்துகிறது.

மழைகாலத்தில் பாலம் வழுக்குவதற்குப் பின்னால் உள்ள முக்கியமான காரணங்களில் ஒன்று அதன் கட்டு மானப் பொருட்களில் உள்ள தேய்வு தான். இரும்பு, அதிக காலம் நீடித்திருக்கும் போது, தண்ணீரின் தன் மைக்கு ஏற்றாற்போல் ஆபத்தான மென்மையான மேற்பரப்பை உருவாக்குகிறது. மழைநீர் மேற்பரப்பில் குவிகின்ற போது இழுவை விசையும் குறைகிறது. அவ் வாறான சந்தர்ப்பங்களில் வாகனங்களில் பயணிப் போர் ஒரு நிலையான உராய்வுத் தளம் கிடைக்காமை யால், கட்டுப்பாட்டைப் பராமரிப்பதில் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். பாலத்தின் வடிவமைப்பில் உள்ள குறைபாடு இங்கு முக்கியமாக ஆராயப்படவேண்டும். பயணிக்கும் மேற்பரப்பு தளம் பிடிப்புக்கு(GRIP) ஏற்ற சிறிய பள்ளங்களையும் மேடுகளையும் கொண்டிருக்க வேண்டும். அவை உராய்வை அதிகரிப்பதற்கும் வழுக் கலைத் தடுப்பதற்கும் அவசியமானவை. குறிப்பாக பாதகமான வானிலையின்போது இவை கட்டாயம். ஆனால் வல்லைப்பாலத்தில் அப்படியான மேடுபள்ளக் கட்டமைப்பு இல்லை. இந்தக் குறைபாடு, சிறியதாகத் தோன்றினாலும், அதன் விளைவு உயிர் ஆபத்து வரை யில் கொண்டு சேர்த்துவிடும். இதற்கு சிலவாரங்களுக்கு முன்னர் வல்லைப் பாலத்தில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக இறந்தமை எடுத்துக் காட்டாகும். எந்தத் தவறும் செய்யாமல் சரியாக தனது உந்துருளியில் அந்தக் குடும்பஸ்தர் பயணித்தபோதும், எதிரே வேகமாக வந்த வாகனம், வல்லைப் பாலத்தின் வழுக்கும் தன்மையால் நிலைதடுமாறி எதிரே வந்த குடும் பஸ்தரை மோதி,அவரது உயிரைக் குடித்துவிட்டது.

"வல்லைப் பாலம் பல வருட வரலாற்றைக் கொண்டது. முதலில் கொங்கிறீட் பாலமே இருந்தது. சுமார் 20 வரு டங்களுக்கு முன்னர் தான் இது இரும்புப்பாலமாக மாற் றப்பட்டது. பாலத்தின் கட்டுமானப்பொருட்களின் மேற்ப ரப்பில் ஏற்படுகின்ற தேய்வுதான் இன்றுள்ள மிக முக்கி யமான சிக்கல் ஆகும். வருடம் முழுவதும் பல வாகனங் களின் ரயர்கள் ஏற்படுத்தும் அழுக்குகள் ஒரு வழுக்கும் மேற்பரப்பை உருவாக்குகிறது. தூறல் மழை அதன் வழுக்கும் தன்மையை அதிகரிக்கிறது. அவ்வாறான சமயங்களில் வாகனங்கள் நிலை தடுமாறுகின்ற சம்ப வங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இந்த மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் இறந்தவர் தன்னுடைய பிள் ளைக்கு ஏடு தொடக்கி விட்டு தனியாக வரும் போது இறந்துள்ளார். மேலும் அவர் இளமையான நபர் .அவர் இறந்ததற்கு பாலத்தில் உள்ள குறைபாடுதான் காரணம். அதன் பிறகும் கூட சில விபத்துகள் ஏற்பட்டன. அவரின் குடும்பத்தாரின் இழப்பு மிகப்பெரியது. எங்களின் நீண்ட நாள் கோரிக்கை இந்தப் பாலத்தை தொண்டைமா னாறு, பூநகரி போன்று கொங்கிறீட் பாலமாக மாற்றுவது தான். ஏனென்றால் அதனால் சில்லுக்கும் பாதைக்கு மான உராய்வினை அதிகப்படுத்தமுடியும். அதுமட்டு மன்றி பாலத்திற்கு அருகில் வசிப்பதனால் மழைகாலத் தில் எவ்வாறு பயணிக்கலாம், எந்த வாகனத்தை எந்த கதியில் செலுத்தவேண்டும் என்பது எங்களுக்குத் தெரி யும். ஆனால் புதிதாக வருபவர்களுக்கு அது தெரியாத காரணத்தினாலேயே அடிக்கடி விபத்துகள் இங்கு நிகழு கின்றன. இரவில் நிலைமை இன்னும் மோசம். இரவில் போதுமான வெளிச்சம் கிடைக்க ஒழுங்கு செய்வதோடு வேகத்தடைகளை அதிகப்படுத்தல், கண்காணிப்பு கம ராக்களை பொருத்தி பராமரிப்பினை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தினால் பலரது உயிரைக் காப்பாற்ற லாம்"

என்கிறார் அச்சுவேலி வடக்கில் வசிக்கும் சின் னத்துரை குணபாலசிங்கம். வல்லைப் பாலத் துக்கு அருகாக வசிக்கும் இவர் அந்தப் பாலம்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தகங்களில் வேட்பாளர்கள்; தேங்காய் கியூவில் வாக்காளர்கள்?



நிலாந்தன்

பொதுத்தேர்தலில் போட்டியிடும் மருத்துவர் ஒருவர், இன்னொரு கட்சியின் பெண் வேட்பாளரோடு நாகரிகமின்றி நடந்து கொண்டது ஒரு விருந்தகத்தில் ஆகும். அது தொடர்பாக ஊடகச் சந்திப்பில் கருத்து தெரிவித்த சம்பந்தப்பட்ட பெண் வேட்பாளர், அந்த விருந்தகத்துக்கு தானும் உணவருந்தச் செல்வதுண்டு என்று கூறுகிறார். தனக்குத் தெரிந்தவர்களையும் அங்கு விருந்துண்ண அழைத்துச் செல்வதுண்டு என்றும் கூறுகிறார். சம்பவம் நடந்தபோது அந்த விருந்தகத்தில் நிறையப் பேர் தெரிந்த ஆட்கள் இருந்ததாகவும், அவர்களில் அனேகர் ஏதாவது ஒரு கட்சியோடு தொடர்புடைய ஆட்கள்தான் என்றும் கூறுகிறார். அதாவது அவர் ஊடக சந்திப்பில் தெரிவித்த தகவல்களின்படி தமிழ் வேட்பாளர்களில் ஒரு பகுதியினர் அப்படிப்பட்ட உயர்தர விருந்தகங்களில்தான் உணவு அருந்துகிறார்கள். தமது ஆதரவாளர்களையும் அங்கே அழைத்துச் செல்கிறார்கள். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. யாழ்ப்பாணத்தில் ஒரு விருந்தினர் விடுதியில் தேர்தலைக் கண்காணிப்பதற்கான பவ்ரல் அமைப்பின் கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது. தேர்தல் திணைக்களத்துக்கு நிதி அதிகாரம் வழங்குவது குறித்தும் தேர்தல்கள் தொடர்பில், மேற்கத்திய ஜனநாயகங்களில் உள்ளதுபோல நிரந்தரமான ஒரு நேர அட்டவணை அறிவிக்கப்படவேண்டும் என்பது குறித்தும் கருத்துளைத் திரட்டுவதற்கான ஒரு கருத்தமர்வு அது.

இதில் கலந்து கொண்ட வளவாளர்கள் மற்றும் பயனாளர்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட தொகைப் பணம் வழங்கப்பட்டது. பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களின் கருத்தரங்குகளில் அப்படித்தான், பெரும்பாலும் விருந்தினர் விடுதிகளில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவது; வருகைப் பதிவை எடுப்பது; முதலில் சிற்றுண்டியும் பின்னர் மதிய உணவும் கொடுத்து முடிவில் பயணச் செலவு என்று சொல்லி ஒரு தொகையை கொடுப்பது. இதுபோன்ற பெரும்பாலான கருத்தரங்குகள் "ஏசி" வசதி கொண்ட விருந்தினர் விடுதிகளில்தான் நடக்கும். மின்விசிறிகளைக் கொண்ட, ஜன்னல்கள் திறந்து விடப்படும் சாதாரண மண்டபங்களில் நடப்பது குறைவு.

பவ்ரல் எனப்படுவது நேர்மையான, முறைகேடுகளற்ற தேர்தல் கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்காகச் செயற்படும் ஒரு சிவில் அமைப்பு. அது தனது கூட்டத்தை வசதி கொண்ட விருந்தினர் விடுதிகளில் நடத்துவதோடு பயனாளிகளுக்கு பணமும் கொடுக்கின்றது. அதாவது நேர்மையான தேர்தலைக் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகளுக்கு வருபவர்களை ஊக்குவிப்பதற்கு காசு கொடுக்கவேண்டியிருக்கிறதா? இதுபோன்ற கருத்தரங்குகளை ஏன் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பொதுவான வாய்ப்பாட்டுக்கு வெளியே போய் சாதாரண மண்டபங்களில் நடத்தக்கூடாது?

பவ்ரல் போன்ற அமைப்புகள் அப்படிச் செய்யலாமென்றால், கட்சிகளும் தமது தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு வாகனங்களை ஒழுங்குபடுத்தி, அதில் வருபவர்களுக்கு சாப்பாடும் சிற்றுண்டியும் குடிபானமும் காசும் கொடுத்து அழைத்துக் கொண்டு வருவதில் என்ன தவறு?

தமிழ்ப் பகுதிகளில் சில கட்சிகள் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு அழைத்துக்கொண்டு வரும் ஆதரவாளர்களுக்கு உணவு அல்லது சிற்றுண்டி, குடிபானம் என்பவற்றோடு காசும் கொடுக்கின்றன. கிட்டத்தட்ட 2500 ரூபா வரை கொடுக்கப்படுகிறது. தேர்தல் நாளன்று தூர இடங்களில் இருக்கும் வாக்காளர்களை வாகனம் விட்டு ஏற்றி இறக்குவதற்கும் அதாவது வாக்களிப்பதற்கும் காசு கொடுக்கப்படுகிறது. அல்லது மது கொடுக்கப்படுவதாகவும் தகவல்கள் உண்டு.

மேற்கண்ட சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? வேட்பாளர்களில் ஒரு தொகுதியினர் உயர்தர விருந்தகங்களில் உணவருந்துகிறார்கள். அங்கே தமது ஆதரவாளர்களையும் அழைத்துச் செல்கிறார்கள். வாக்காளர்களுக்கு அறிவூட்டும் நோக்கத்தோடு நடத்தப்படும் கருத்தரங்குகளும் அப்படிப்பட்ட விருந்தகங்களில்தான் நடக்கின்றன. அங்கேயும் பயனாளிகளுக்கு அந்த விருந்தினர் விடுதியின் தரத்துக்கு ஏற்ப உணவு கொடுக்கப்படுகிறது. சராசரி வாக்காளர்கள் அண்ணாந்து பார்க்கும் விருந்தகங்களில் வேட்பாளர்கள் சாப்பிடுகிறார்கள். நேர்மையான தேர்தலை குறித்து வகுப்பெடுப்பவர்களும் சாப்பிடுகிறார்கள். ஆனால் சராசரி வாக்காளர்கள் எங்கே சாப்பிடுகிறார்கள்?

நட்சத்திர அந்தஸ்துள்ள விருந்தகங்களில் உணவருந்தும் வசதி வாய்ப்புகளைக் கொண்டிராத சராசரி வாக்காளர்கள் "மந்தை மனோநிலை"யோடு வாக்களிக்கிறார்கள் என்று புலம்பெயர்ந்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் கூறுகிறார். லண்டனில் வசிக்கும் அவர் தமிழ்த்

**தேர்தலை புத்திபூர்வமாக அணுக முற்றப்படும் பவ்ரல் போன்ற அமைப்புகள் தமது விழிப்பூட்டும் கருத்தரங்குகளை ஏசி வசதிகளைக் கொண்ட விருந்தகங்களில் நடத்துவதை விடவும் கிராமங்களை நோக்கிச் சென்றால் என்ன?**

தேசிய மக்கள் முன்னணியின் தீவிர ஆதரவாளர். ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களித்த மக்களைக் குறித்து முகநூலில் அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.. "பொதுகட்டமைப்பு என்ற தற்காலிக அமைப்பு (ad hoc committee) முன்வைத்த கோஷங்களுக்காக மக்கள் வாக்களித்தார்களா? அல்லது ஒரு மந்தை மனப்பாங்கில் (herding mentality) தமிழ் வேட்பாளருக்கு வாக்களித்தார்களா? முதலாவது எனில் அரசியல் விழிப்புணர்வுமிக்க இரண்டு லட்சம் பேரை திரட்டிவிட்டீர்கள் என்று கூறுவீர்களா?" இங்கு அவர் மந்தை மனப்பாங்கு என்று குறிப்பிட்டிருப்பது தமிழ்மக்கள் இன உணர்வின் அடிப்படையில் பொதுவேட்பாளருக்கு வாக்களித்ததைத் தான். அதாவது ஒரு தமிழருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதற்காக வாக்களித்த சுமார் 2 லட்சத்து 26 ஆயிரம் மக்களும் மந்தை மனப்பாங்கோடு வாக்களித்ததாக அவர் கூறுகிறார்.

யாழ்ப்பாணத்தில், சஜித் பிரேமதாஸவின் மேடையில் வைத்து இன்னொரு அரசியல்வாதி கூறினார், பொது வேட்பாளருக்குப் போடும் வாக்குகள் வீணாகப் போகும் வாக்குகள் என்று. அதாவது, தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு விழுந்த இரண்டு லட்சத்து 26 ஆயிரத்துக்கும் குறையாத வாக்குகள் வீணாய்ப்போன, மந்தைத்தனமான வாக்குகளா?

ஆயின், தமிழ் வாக்காளர்களை, விமர்சனபூர்வமாக சிந்திக்கும், "அரசியல் விழிப்புணர்வுமிக்க" வாக்காளர்களாக வளர்த்தெடுப்பதற்கு எந்த ஒரு கட்சியிடமாவது ஏதாவது ஒரு பொறிமுறை உண்டா? இல்லையே? எல்லாக் கட்சித் தலைவர்களும் குருட்டு விசுவாசிகளைத்தானே அருகில் வைத்திருக்கிறார்கள்? விழிப்படைந்த தொண்டர்களை ஏன் அருகில் வைத்திருப்பதில்லை ? குருட்டு விசுவாசிகளை, விமர்சனபூர்வமாக சிந்திக்கும் விழிப்படைந்த வாக்காளர்களாக மாற்றுவதற்கு கட்சிகளிடம் பொருத்தமான அரசியல் தரிசனங்களோ கட்டமைப்புகளோ இல்லை. கட்சித் தலைவர்களிடமும் அதற்குரிய கொள்ளளவு இல்லை.

இந்நிலையில், தேர்தலை புத்திபூர்வமாக அணுக முற்படும் பவ்ரல் போன்ற அமைப்புகள் தமது விழிப்பூட்டும் கருத்தரங்குகளை ஏசி வசதிகளைக் கொண்ட விருந்தகங்களில் நடத்துவதை விடவும் கிராமங்களை நோக்கிச் சென்றால் என்ன? தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தேர்தல் காலத்தில் மட்டும் ஊர்களை நோக்கிச் செல்லாமல், தொடர்ச்சியாகத் தமது ஆதரவாளர்களுக்கு விழிப்பூட்டும் கூட்டங்களை நடத்தினால் என்ன?

தமிழ்க்கட்சிகள் பெரும்பாலானவை விசுவாசிகளைத்தான் கட்சி உறுப்பினர்களாக வைத்திருக்கின்றன. விமர்சனபூர்வமாக சிந்திக்கும் விழிப்படைந்த அரசியல் செயற்பாட்டாளர்களை அல்ல. விசுவாசிகள் முகநூலில் ஒருவர் மற்றவரைத் துரோகி என்பார்கள். நேற்று நண்பனாக இருந்தவர் இன்று கட்சி மாறிவிட்டால் அவர் துரோகியாகி விடுகிறார். தமது கட்சித் தொண்டர்களுக்கு விழிப்பூட்டி அவர்களை அரசியல் மயப்படுத்தும் வேலைத் திட்டங்கள் எந்த ஒரு கட்சியிடமும் இல்லை. இந்த லட்சணத்தில் ஒரு கட்சியின் ஆதரவாளர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களித்த மக்களை மந்தைகள் என்று கூறுகிறார்.

ஆனால் தமிழ் வாக்காளர்களை மந்தைகளாக வைத்திருக்கத்தான் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் விரும்புகிறார்கள். இனமான மந்தைகள்; ஆயுதப் போராட்டத்தின் நேர் வாரிசுகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் மந்தைகள்; ஆயுதப் போராட்டத்தை விமர்சிப்பவர்களுக்கு துரோகிப் பட்டம் சூட்டி அதன்மூலம் தங்களைத் தியாகிகளாகக் காட்டிக் கொள்ளும் மந்தைகள்; சாராயப் போத்தலுக்கு வாக்களிக்கும் மந்தைகள்; காசு கொடுத்துப் பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு வரப்படும் மந்தைகள்; முகநூலில் நேரலையில் தோன்றும் மருத்துவரை நம்பிக் காசை விசுக்கும் மந்தைகள்;போன்ற எல்லாவகை மந்தைகளையும் குருட்டு விசுவாசிகளையும் மேய்க்கத்தான் எல்லாக் கட்சிகளும் விரும்புகின்றன. வாக்காளர்களை மந்தை மனோநிலையில் இருந்து விடுவித்து அரசியல் விளக்கமுடைய விழிப்படைந்த வாக்காளராக மாற்றுவதற்கு எந்தக் கட்சியாவது தயாரா? அல்லது எந்த 'என்.ஜி.ஓ' வாவது தயாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.கதிர்காமநாதன்

சஞ்சீவி சிறுகதை

# சிங்க மகாராசா

காட்டில் சிங்கங்களுக்கு இடையே மறுபடியும் தேர்தல் நடைபெற்றது. தற்போது பதவியிலுள்ள சிங்கமகாராசாவின் பதவிக்காலம் முடிவுக்கு வந்ததால் தேர்தல் நடத்த வேண்டிய சூழல். உங்களுக்குத் தெரியும் காட்டுக்கு ராசா சிங்கம்தான்.

காட்டுக்கு ராசா சிங்கம் என ரொம்ப காலத்துக்கு முன்னரே தீர்மானம் செய்து விட்டார்கள். புலி, யானை போன்ற விலங்குகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. மற்றைய விலங்குகள் சிங்கத்தின் ஆணைப்படிதான் நடக்கவேண்டும்.

> “சிறுபான்மையினப்புலிகளும் தம் சார்பில் ஒரு பல்லில்லாத புலியை தேர்தலில் களமிறக்கி தங்கள் புறக்கணிப்பை வேறுவிதமாகக் காட்டின. தேர்தலும் நடந்து முடிந்தது . ஆனாலும் பெரும்பான்மை சிங்கங்களிலிருந்தே ஒரு ராசா தெரிவுசெய்யப்பட்டார்.”

ஒருமுறை புலிகள் ஒன்று சேர்ந்து தங்களின் சிறுபான்மை இனத்துக்காவும், சுய கௌரவத்துக்காக வும் சிங்கராசாவுக்கு எதிராகப் போரிட்டன. கடைசியில் புலிகள் நசுக்கப்பட்டு போர் முடிவடைந்து. இரை தேடிப்போன புலிகளின் பிள்ளைகளை சிங்கராசாவின் காவல் விலங்குகள் பிடித்துக்கொண்டு சென்றுவிட்டன. இன்றுவரை புலிகளும் தமது பிள்ளைகளை தேடிய வண்ணம் உள்ளன. தமது பிள்ளைகளை கண்டு பிடித்துத் தரும்படி சிங்கமகாராசாவிடம் கேட்டும் நீதி கிடைக்கவில்லை.

காட்டில் தமக்கான அத்தியாவசியத் தேவைகள் கிடைக்காத நிலையில் அடுத்த சிங்கராசாவை நியமிப்பதற்கான தேர்தல் அறிவிப்பு புலிகளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. வாக்கு கேட்க வரும் போது, 'நாம் அனைவரும் ஒன்றுதான், இந்தக் காடு அனைவருக்கும் சொந்தம், பிள்ளைகளை மீட்டுத் தருகிறோம். எங்களுக்கு வாக்களியுங்கள்' என்று சிங்கங்கள் கூறுவதை கேட்டுக் கேட்டு புலிகளுக்கு காது புளித்துப் போய்விட்டது.

சில சிறுபான்மையினப் புலிகளும் சிங்கராசாக்களுடன் சேர்ந்து கொண்டு சிங்கங்களுக்கு பக்கவாத்தியம் வாசிக்கத் தொடங்கி விட்டன. காலம் வந்தால் காட்டின் புதிய ராசாவை தெரிவு செய்து தானே ஆகவேண்டும். சிறுபான்மையினப்புலிகளும் தம் சார்பில் ஒரு பல்லில்லாத புலியை தேர்தலில் களமிறக்கி தங்கள் புறக்கணிப்பை வேறுவிதமாகக் காட்டின. தேர்தலும் நடந்து முடிந்தது . ஆனாலும் பெரும்பான்மை சிங்கங் களிலிருந்தே ஒரு ராசா தெரிவுசெய்யப்பட்டார். புதிய சிங்கராசா என்ன செய்யப்போகிறார்? எங்களுக்கு நீதி கிடைக்குமா என புலிகள் சிந்தித்தன, ஏங்கின.

பிள்ளையை பறிகொடுத்த வயதான பெண் புலி இரவு படுத்திருந்தவாறு புலம்பியது.

'என்ர பிள்ளையை புது ராசா கண்டுபிடிச்சு குடுப்பாரோ?...ம்..நீதி கிடைக்கும்..பாப்பம்'

அதைக் கேட்ட மூத்த ஆண் புலி சிரித்தது.

'ஏன் சிரிக்கிறியள்?'

'நீ எந்த நம்பிக்கையில நீதி கிடைக்கும் எண்டு நம்புறாய்?'

'புதுசிங்கராசாவாச்சே..அதுதான்!'

' எடி லூசி, பேர்தான் புதுச் சிங்கராசா . எண்டாலும் அவரும் சிங்கம் தானே!'

மறுபடியும் ஆண்புலி சிரிக்கத் தொடங்கியது.



# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

இரவிரவா நடந்து ஒருமாதிரி வரணி சாவலப்பிட்டி கந்தசாமி கோயிலடிக்கு வந்து சேர்ந்தம். விடியும் வரைக்கும் அங்க தானிருந்தம். பேந்து நவண்ணாவின்ர செல்வாக்கில கோயிலுக்குப் பக்கத்திலயிருந்த இரு வீட்டில தங்கிறதுக்கு இடங்கிடைச்சுது. அந்த வீட்டில் ஒருவயதுபோன அய்யாவும் அம்மாவுந்தானிருந்தவை. அதோட அவையின்ர மகளும் ஒராளிருந்தவா. அவவுக்கு அப்ப பிள்ளை பிறந்திருந்தது. அதை ஏணையில கிடத்தி ஆட்டிக் கொண்டிருந்ததும் நினைவிருக்கு. அந்த வீட்டோட பின்னுக்குப் பெரிய வளவுமிருந்தது. அந்த வீட்டில நவண்ணாவின்ர குடும்பத்தோட அவன்ரை தாயின்ர தங்கைக்காரிமாற்ற குடும்பங்களும் வந்து தங்கியிருந்தவை. மற்றது அவையின்ர பக்கத்து வீட்டாக்களும் வந்து நீண்டவை. அதிலை வெள்ளை முகுந்தன், அவன்ரை தம்பி வினோதன் இரண்டு பேரும் அங்கை எனக்குச் சிநேசிதமானாங்கள். அவங்கள் என்ரை அம்மா வழியில எனக்கு நெருங்கின சொந்தம் எண்டது பிறகுதான் எனக்குத் தெரியும்.

வெள்ளை முகுந்தன் எண்டதும் நீங்கள் அவன் நல்ல வெள்ளைப் பொடியனாக்கும் எண்டு நினைப்பியள். ஆனால் அவன் நல்லகறுவல். பிறகேன் வெள்ளை முகுந்தன் எண்டு சொல்லுறன்? அதுக்குமொரு வலுவான காரணமிருக்கு. வெள்ளை முகுந்தன் என்ர வயதுப் பொடியன்தான். மற்றப்பொடியளிட்டயில்லாதவொரு நல்லபழக்கம் அவனிட்ட இருந்தது. அதுதான் “ரைம் மனேஜ்மென்ற்”. இப்ப மூண்டு மணிக்கு வகுப்பு இருக்கெண்டு வையுங்கோவன், புயலடிச்சாலென்ன? மழைபெய்தாலென்ன? முகுந்தன் சரியா மூண்டு மணிக்கு வகுப்பில நிப்பான், இதைத்தொடர்ந்து நோட் பண்ணிப் போட்டு எட இவன் வெள்ளைக்காறன் மாதிரி ரைமை மனேஜ் பண்ணுறானே எண்டிட்டு வெள்ளை முகுந்தன் எண்டு பட்டம் வைச்சிட்டாங்கள். இதுதான் முன்கதைச்சுருக்கம்.


04

அடுத்தநாள் பின்னேரம் நானும் நவண்ணாவும் சைக்கிள்ள டபிளா வீட்டை வந்திட்டுப் போனம். இரண்டுநாள் வரணியில நிண்டுட்டு மறுநாள் காலமை அம்மம்மாவையும் சைக்கிளை ஏத்திக்கொண்டு வீட்டை வந்து சேந்திட்டன். அதுக்குப்பிறகுதான் நிம்மதியாயிருந்தது. இனி உயிர் போனாலும் ஓர் இடமும் வெளிக்கிடுறேல்லயெண்டு முடிவெடுத்தன். அடுத்த நாள் விடியப்பிறம் கொழும்பிலயிருந்து அப்பா வந்து சேந்திட்டார். பிறகு 1992 ஜனவரியில இளையண்ணாவை வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு அம்மாவும் வந்து சேந்திட்டா. இப்பிடி நவராத்திரி எண்டால் கனக்கக்கதையள் ஞாபகத்தில வந்துநிக்கும்.

வழமையா மாரிகாலத்திலதான் நவராத்திரி, தீபாவளியெல்லாம் வரும். எங்கட தல்லையப் புலக்குளம் அந்த மூட்டம் மேவிநிக்கும். நாங்கள் அதுக்குள்ள விழுந்து குளிப்பம். வீட்டை தெரிஞ்சால் கடைசிவரையும் விடமாட்டினம். வீட்டுக்குத்தெரியாமல்தான் நான், சிவன், முருகன், கண்ணன் எண்டு ஊர்ப்பொடியள் முழுக்க அதிலை விழுந்து குளிப்பம். பிறகு தண்ணி வத்திக் கொண்டு வரேக்குள்ள மீன்குஞ்சு பிடிக்கிறதும் எங்களுக்கொரு பொழுதுபோக்கு. குளக்கரையில் நிண்டு தண்ணியக் கரைக்கு அடிப்பம். மீன் குஞ்சுகள் வெளியில வந்து விழுந்து துடிக்கும். ஒவ்வொண்டா எடுத்துப் போத்திலுக்க விடுவம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் ஏழு நாட்கள்....

பேராசிரியர் க.பஞ்சாங்கம்
புதுச்சேரி

மனித வாழ்வில் எவ்வளவோ பேரைச் சந்திக்கிறோம். அதுவும் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றுவதற்கு வாய்த்தால் சந்திக்கிற மனித ஜீவிகளுக்குக் கணக்கு வழக்கே இல்லை. இப்படிச் சந்திக்கும் போது யார் யாருடைய நினைவு மண்டலத்தில் எந்தெந்த மாதிரியாகப் போய்ச் சேருகிறோம் என்பதை அவ்வளவு எளிதாகக் கணித்துவிடமுடியாது. அப்படித்தான் 2010 இல் கோவை செம்மொழி மாநாடு நடந்தபோது அங்கே ஈழநாட்டில் இருந்து வந்திருந்த ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. நானே அந்த மாநாட்டுக்குச் செல்வது குறித்துப் பல்வேறு குழப்பங்களுக்கு நடுவில்தான் போய்ச் சேர்ந்திருந்தேன். காரணம், கோவை ஞானி, தமிழவன் போன்ற தமிழக அறிவாளிகள் பலரும் அந்த மாநாட்டிற்குச் செல்லக்கூடாது என்ற முடிவை எடுத்திருந்தனர். மேலும் அனைவரும் புறக்கணிக்க வேண்டும் என்றும் கூட்டுக் கையெழுத்து இயக்கமும் நடத்திக் கொண்டிருந்தனர். இப்படியான ஒரு சூழலில் தான் அந்த மாநாட்டை முன்னின்று நடத்திய அப்போதைய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தனிப்பட்ட முறையில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கட்டாயம் நீங்கள் எல்லாம் கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். நம்மையும் ஒரு பொருட்டாக நினைத்து ஒரு துணைவேந்தரே அழைத்துப் பேசுகிறாரே என்று நெகிழ்ந்து போனேன். அதுவும் அல்லாமல் மாநாட்டு மலருக்கு வந்திருந்த திறனாய்வு சார்ந்த கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் தலைவராகவும் என்னை நியமித்திருந்தார். எனவே நன்றி உணர்வோடு மாநாட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கேதான் எனைத் தேடிவந்து "உங்கள் புத்தகங்களை எல்லாம் வாசித்திருக்கிறேன் ஐயா. உங்களை எப்படியும் இந்த மாநாட்டில் சந்தித்து விட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அப்படி எண்ண வைக்கும் எழுத்து முறை உங்கள் எழுத்து " என்றவர் தன்னை அஜந்தகுமார் என அறிமுகப்படுத்திக் கொண்டார். ஒரு ஐந்து நிமிடச் சந்திப்பு தான். அது இந்த அளவிற்கு அவருக்குள் படர்ந்து நிரம்பிக் கிடந்திருக்கிறது. அந்த 2010 இல் இருந்து விடாமல் என்னோடு தொடர்பு கொண்டிருந்தார். ஒரு தடவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்தபொழுது, மூத்த மகன் மருத்துவர் அன்புச்செல்வன் குடும்பத்தோடு மேகலயா மாநிலத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன். மற்றொரு முறை அழைத்த போது இளைய மகன், மருத்துவர் பாண்டியன் வீட்டில் சிங்கப்பூரிலிருந்தேன். இப்படியாக விடாமல் அவர் இந்தத் தடவையும் அழைத்தபோது மகிழ்ச்சியாக யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டேன்.

ஏற்கனவே 2011இல் இலங்கை அரசின் இந்து சமயத் திணைக்களம் சார்பாகப் "பின் காலனித்துவத்திற்குப் பிறகான ஈழத்துத் தமிழ் இலக்கியம்" என்ற பொதுத் தலைப்பில் நடந்த கருத்தரங்கிற்குத் திறப்புரை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டுத் தலைநகர் கொழும்பிற்குச் சென்றுள்ளேன். அப்படியே மட்டக்களப்பு, கண்டி, பேராதனைப் பல்கலைக்கழகமென ஒரு வாரம் தோழர், பேராசிரியர் இ.முத்தையாவுடன் மூத்த பேராசிரியர் மௌன குரு வழி காட்டப் பார்த்துள்ளேன். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பார்க்கவேண்டுமே என்ற எனது நீண்ட நாள் ஆசையைத் தெரிவித்தபோது கொழும்பிலிருந்து காரில் சென்றால் கூட எட்டுமணி நேரப் பயணம். அதற்கான காலம் இப்பொழுது இல்லை என்று தெரிவித்தனர். எனவே யாழ்ப்பாணத்தைப் பார்க்காமலேயே திரும்புகிறோமே என்ற ஏக்கம் எனக்குள் அழுத்தமாகப் பதிந்திருந்து. இப்பொழுது அந்த ஏக்கம் தீரப் போகிறது என்ற நினைப்போடு யாழ்ப்பாணத்துக்குக் கிளம்பிவிட்டேன். இதில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய மற்றொன்று எங்கு பேசப் போனாலும் என்னோடு கிளம்புவதற்கு ஒத்துக் கொள்ளாமல், "நீங்க போங்க, நான் அந்த ரெண்டு நாளும் நன்றாக ஓய்வு எடுத்துக்கொள்வேன் " எனக் கூறும் துணைவியார் பிரபாவதி இந்தத் தடவை "நானும் வருகிறேன்" என்று வந்ததோடு, வல்வெட்டித் துறையில் மாவீரர் வீடு இருந்த இடத்தில், ஒரு ஓரத்தில் மட்டும் நின்றிருந்த சிதைந்த சுவரில் எழுதப்பட்டு அதுவும் சிதைந்து காணப்பட்ட "பிரபாகரன் இல்லம்" என்ற எழுத்தைத் தொட்டுப் பார்த்துப் "படம் எடுங்கள்" என்று சொல்லி நின்ற போது உலகத்தில் தமிழர்கள் வாழும் வீடுகளின் சமையல் மூலை வரைப் பரவி நிலைத்திருக்கும் மாவீரரை நினைத்துப் பெரிதும் நெகிழ்ந்து போனேன்.

★★★★

யாழ்ப்பாணம் சர்வதேச வானூர்தி நிலையத்தில் இறங்கி வெளியே வந்தோம். பதினான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன ஆனாலும் கோவையில் அன்று சந்தித்த அதே சிரிப்பு ததும்பும் முகத்தோடு நண்பர் அஜந்தகுமார் வரவேற்று அழைத்துச் சென்றார். ஒரு உள்நாட்டுப் போரை எதிர்கொண்டு பதினைந்து ஆண்டுகள் ஓடிய நிலையில் பசுமையான மரங்களுக்கு நடுவில் கிடந்த யாழ்ப்பாணத்தை விரிந்த கண்களால் பார்த்தவாறு அறைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழ்த் துறையும் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்ட சூழலில் பொன்விழா கொண்டாடும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு "இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் : இலக்கியத்தின் ஊடாக மானுட விடுதலை" என்ற அருமையான கருப்பொருளில் நடக்க இருக்கும் கருத்தரங்கில் திறப்புரை (Keynote address) ஆற்றுவதற்காக என்னைத் தமிழ்த் துறைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் முனைவர் கி. விசாகரூபன் சார்பாக அழைத்திருந்தார் விரிவுரையாளர் அஜந்தகுமார். நான் திறனாய்வுக் கட்டுரைகளும் இலக்கியம் தான் என்ற பார்வை கொண்டவன் என்பதால் "ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வு ஊடாக மானுட விடுதலை" என்ற தலைப்பில் உரையாற்ற இருப்பதாக அறிவித்திருந்தேன்.

தமிழர் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் தொடங்கப்பட வேண்டுமென்ற முயற்சிகளை முன்னெடுத்தபோது, வழக்கம் போல் தமிழ் அரசியல் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லை. செல்வாக்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் திருகோணமலையில் தான் பல்கல்லக்கழகம் வரவேண்டுமென்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் யாழ்ப்பாணத்தில் தான் தொடங்கப்பட வேண்டுமென்றும் தங்கள் பக்கம் சார்பாக பல்வேறு நியாயங்களை வைத்துப் போராடிக் கொண்டிருந்த போது அன்றைய பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு தமிழரசுக் கட்சியின் கடும் எதிர்ப்புக்கு நடுவில் 06.10.1974இல் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தை நிறுவியது. அதுவும் "இலங்கைப் பல்கலைக்கழகம் (யாழ்ப்பாண வளாகம்)" என்ற பெயரில் ஏற்கனவே சேர். பொன். இராமநாதன் நடத்திக் கொண்டிருந்த பரமேஸ்வராக் கல்லூரியை மையமாகக் கொண்டு தொடங்கியது. தொடக்கத்தில் விஞ்ஞான பீடம், மனித பண்பியற் பீடம் ஆகிய இரண்டு பீடங்கள் தொடங்கப்பட்டன. பதினான்கு மாணவர்களோடு தொடங்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழத்தின் முதல் துணைவேந்தராகச் சிறந்த தமிழறிஞர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நியமிக்கப்பட்டார். இந்து நாகரிகத்துறை, தமிழ்த்துறை ஆகிய பிரிவின் தலைவராக மார்க்சிய அறிஞர் பேராசிரியர் க.கைலாசபதி வந்து அமர்ந்தார். இன்று மெதுவாக வளர்ந்து கலைப்பீடம், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், பொறியியல் பீடம், விவசாய பீடம், தொழில்நுட்பப் பீடம், உயர் பட்டப்படிப்பிற்கான பீடம், சேர் பொன். இராமநாதன் காண்பிய மற்றும் ஆற்றுகை நிறுவனம், சித்த மருத்துவப் பிரிவு, ஊடக கற்கை நிலையம், என விரிந்து ஏறத்தாழ 5721 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று பொறிக்கப்பட்ட பல்கலைக்கழகச் சின்னத்தோடு தற்போதைய துணைவேந்தர் கணிதவியல் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா தலைமையில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பல்கலைக்கழகம் ஓரிடத்தில் நிறுவப்படுவது என்பது அந்த இடத்து மனிதர்களுக்குச் சிந்த[illegible] என்று பொருள். அந்த வரலாற்றை தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போலவே ஈழத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்னும் அழுத்தமாக நிரூபித்துக் காட்டியுள்ளது.

★★★★

07.10.2024 திங்கட்கிழமை காலை சரியாக ஒன்பது மணிக்கு, கைலாசபதி கலை அரங்கிற்குள் வந்தவுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைக்கும் துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன் பம்பரம் போல் சுழன்று கொண்டு இருந்தார்; அந்தப் பரபரப்புக்கிடையிலும் 'நான் நேற்று உங்களை அறையில் வந்து சந்திக்க முடியாமல் போய்விட்டது அவ்வளவு வேலைப்பாடு, வருந்துகிறேன்" என்று அன்பைப் பலப்படுத்திக் கொண்டார்.

வழக்கம்போல் மங்கல விளக்கு ஏற்றுதல், தமிழ்த்தாய் வாழ்த்து, இந்து சமய இறைவாழ்த்து, கிறிஸ்தவ சமய இறை வாழ்த்து, வரவேற்பு நடனம், வரவேற்புரை, கலைப்பீடத்தின் பீடாதிபதி உரை, தமிழ்த் துறைத் தலைவரின் தலைமை உரை, துணைவேந்தர் விருந்தினரை மாலையும் துண்டும் போர்த்திச் சிறப்பு செய்தல், விருந்தினரை அவைக்கு அறிமுகப்படுத்துதல் முதலிய சடங்குகள் முடிந்தவுடன் நான் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டேன். போட்டிருக்கும் "மாலையோடேயே பேசுங்கள்" என்று கூறிய துணைவேந்தர் உட்பட எல்லோரும் தமிழர் பாரம்பரியமான வேட்டியையே உடுத்தியிருந்தார்கள். தெரிந்திருந்தால் நாமும் வேட்டியிலேயே வந்திருக்கலாமே என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன். யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெரு அறிஞர்களும், மேனாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் உட்படப் பல்வேறு துறைத் தலைவர்களும் பதிவாளர் போன்ற நிர்வாகிகளும் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகளும் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பல்துறை சார்ந்த மாணவச் செல்வங்களும் திரளாகக் கூடியிருந்த அந்தப் பெரிய கைலாசபதி அரங்கைப் பார்த்து முதலில் "எல்லோருக்கும் வணக்கம்" என்று என் மரியாதையைச் செலுத்திக் கொண்டேன். உணர்ச்சிவசப்பட்டவனாக.

"ஆதார சுருதி உரையை" நான் இப்படித் தொடங்கினேன் :

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று உலக மனித நேயத்தை அவாவுகிறவன் நான். எனவே மனித உயிர்களை வேட்டையாடி அழிக்கும் போர் ஆயுதங்களையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்வதும் அவற்றை உலகச் சந்தையில் விற்பதுமான கொடிய இராணுவப் பொருளாதாரமெனும் நச்சுச் சூழல் ஒழிந்து கூடவே போரும் அறவே இல்லாமல் போகவேண்டுமென்று கனவு காண்கிறவன் நான் என்கிற முறையில், ஒரு பெரிய கண்ணீர்த் துளி போல இந்தியாவிற்குக் கீழே தொங்கும் இலங்கையைப் பார்க்கும் போதெல்லாம் பரிதவித்துப் போகிறேன். இந்த இலங்கைப் பூமியின் மேல் உள்ளேயும் வெளியேயும் நிகழ்த்தப்பட்ட ஆக்கிரமிப்புக்களின் வரலாறுகளை எல்லாம் வாசிக்கும் போது என் உள்ளம் வாடி வதங்கி விடுகிறது. எப்படிப்பட்ட இயற்கை கொழிக்கும் வளமான தேசம்! எப்படிப்பட்ட மக்கள்! எப்படிப் பட்ட உழைப்பாளிகள்! எப்படிப்பட்ட அறிஞர்கள்! ஆனால் இவர்களுக்கு வாய்த்ததோ எப்படிப்பட்ட துயரம் நிறைந்த வாழ்க்கை? என்றெல்லாம் எண்ணி எண்ணித் துக்கமுற்றுத் தூக்கம் இழந்து போகிறேன்.

மேலும் என் பதின் பருவத்தில் என்னைப் பெரிதும் பாதித்த பேராளுமை பேராசிரியர் கைலாசபதி பெயரில் அமைந்த அரங்கின் மேடையில் நிற்பது எனக்குள் உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருவிதமான சிலிர்ப்பு பரவிய வண்ணம் இருக்கிறது. திராவிட இயக்கம் கற்பித்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்த என்னை மாற்றிய மார்க்சிய விமர்சனத்தை எனக்குள் விதைத்தவர் பேரறிஞர் கைலாசபதி. இது போலவே பேராசிரியர்கள் நித்தியானந்தன், கார்த்திகேசு சிவத்தம்பி, நுஃமான், சண்முகதாஸ், வேலுப்பிள்ளை, செல்வநாயகம், கலா பரமேஸ்வரன், ஏ.ஜே. கனகரத்னா, சண்முகலிங்கன் முதலிய மாபெரும் ஆளுமைகள் உலாவிய இந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் வீசும் காற்றை நானும் இங்கே நுகர நேர்ந்த இந்த வாழ்வின் திருவிளையாடலை இரசிக்கின்றவனாக இந்த மேடையில் உங்கள் முன் நிற்கிறேன்"

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்: 14

## க. உமாமகேசுவரம்பிள்ளை (05.05.1934 - 20.04.2024)

# வாழ்வுக்கு இலக்கணம் திருக்குறள்! இலக்கியம் பெரியபுராணம்!

O பா.துவாரகன்


**கலாயோகி ஆனந்த குமாரசுவாமியும் கி. அ. சச்சிதானந்தமும்**

கலாயோகி ஆனந்த குமாரசுவாமி பற்றிய ஆராய்ச்சிக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த கி. அ. சச்சிதானந்தம் அவர்கள் ஏறத்தாழ 12 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இவர் மீது எனக்கு அபிமானத்தை ஏற்படுத்தியவர் புலோலியில் வசிக்கும் இலக்கியச் சோலை இ.து. குலசிங்கம் அவர்கள்.


இந்து கலாசாரத் திணைக்களம் கொழும்பில் நடத்திய ஆய்வு மாநாட்டுக்கு ஆனந்த குமார சுவாமி பற்றிய ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க சச்சிதானந்தம் இலங்கைக்கு வருகை தந்தார். சச்சிதானந்தம் அவர்களைக் கொழும்பில் சென்று சந்தித்தேன். காந்தியைப்போல எளிமையாக வாழ்ந்த இராஜேந்திரம் அவர்களது வீட்டில் நாம் சந்தித்தோம். நான் 2012 இல் தமிழகம் சென்றபோது கோபாலபுரத்திலிருந்த சச்சிதானந்தத்தின் வீட்டில் சிலதினங்கள் தங்கினேன். அவர் அதிகாலை 3 மணிக்கு எழுந்து எழுதுவது வழமை.

ஆனந்த குமாரசுவாமி பற்றிய 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆவணங்கள் (கட்டுரைகள், புகைப்படங்கள், ஓவியங்கள்) சச்சிதானந்தத்தின் நூலகத்தில் இருந்தன. ஒரு நாள் அவரது வீட்டு நூலகத்தைத் திறந்தார். வியப்பாக இருந்தது. அறைமுழுவதும் புத்தக இறாக்கைகள் ஒருவர் மட்டுமே உள்ளே சென்று புத்தகங்களை எடுக்கமுடியும். அறை புத்தகங்களால் நிரம்பி வழிந்தது.

எவ்வாறு ஆனந்த குமாரசுவாமி மீது ஈடுபாடு ஏற்பட்டது? என்று கேட்டேன். கல்லூரி நாள்களில் ஆனந்தகுமார சுவாமியின் எழுத்துகளால் ஈர்க்கப்பட்ட சச்சிதானந்தம் இந்தியாவிலுள்ள அனைத்து அருங்காட்சியகங்களுக்கும் புராதன ஆலயங்களுக்கும் சென்று இந்திய சிற்பங்கள், ஓவியங்கள் பற்றிய தேடலை மேற்கொண்ட போது பெரும்பாலான சிற்பங்களுக்கு விளக்கங்கள், அடிக்குறிப்புகள் ஆனந்த குமாரசுவாமி என்று குறிப்பிட்டிருப்பதைக் கண்டு கலாயோகி ஆனந்த குமாரசுவாமி பற்றிய ஆராய்ச்சியை ஆரம்பிக்கிறார். ஆனந்த குமாரசுவாமியின் ஆக்கங்கள், அவரைப்பற்றிய பிறரது ஆக்கங்களைத் தேடி ஐரோப்பாவுக்கும் சென்றார். ஐரோப்பாவில் உள்ள அனைத்து அருங்காட்சியகங்களுக்கும் சென்றார்.



கி. அ. சச்சிதானந்தம்



உமாமகேசுவரன் நாட்குறிப்பு

சச்சிதானந்தம் கலை இலக்கிய இரசனையிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் ஈடுபாடு மிக்கவர். இந்தியா முழுவதும் சுற்றியலைந்தார். உலகைச் சுற்றி வரவேண்டும் என்ற பேராவல் மிக்கவர். அவரது பயணங்களில் பெரும் பகுதி இமயத்தை நோக்கி இருந்தது. பயணங்களின் வழியாகத் தமிழகக் கலைவடிவங்களின் தாக்கங்கள் இந்தியா முழுவதும் பரவிக்கிடந்ததைக் கண்டறிந்தார். குறிப்பாக, எல்லோராவில் காரைக்காலம்மையாரின் சிலை இருப்பதை அவர் கண்டறிந்து சொன்ன பிறகே அது தமிழ் உலகுக்குத் தெரியவந்தது. சச்சிதானந்தம், ஆனந்த குமாரசுவாமியின் Dance of Siva என்ற நூலை சிவானந்த நடனம் என்ற பெயரில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.


கோவிட் 19 பெருந்தொற்றுக் காலப்பகுதியில் 2020 இல் கி.அ.சச்சிதானந்தம் அமரத்துவம் அடைந்தார்.

**"உலகில் நான் கற்ற கேட்ட புரிந்துகொண்ட அத்தனையும் திருக்குறளிலேயே இருக்கிறது"** என்பதே சச்சிதானந்தம் உலகுக்கு விட்டுச் செல்லும் செய்தி.

பண்டிதர் உமாமகேசுவரன் தனது அப்பாவை(கதிரிப்பிள்ளை) நினைவு கூரும் போது "வாழ்க்கைக்கு இலக்கணம் திருக்குறள்! இலக்கியம் பெரிய புராணம்!" என்ற கதிரிப்பிள்ளையின் வார்த்தைகளை மொழிவது வழமை.

**சிவதொண்டன் நிலையம்!**

"யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் உள்ள அமைதியை நான் இந்தியாவில் எங்குமே காணவில்லை; சிவதொண்டன் நிலையத்தில் நிலவும் நிலவினது தண்மையும் எளிமையும் இந்தியாவில் எந்த ஒரு ஆன்மிக நிலையத்திலும் இல்லை" என்றார் கி. அ. சச்சிதானந்தம். யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம் யோகசுவாமிகளின் சித்தப்படி தாபிக்கப்பட்ட ஆன்மிக நிலையம். யோகசுவாமிகளின் திருவடியும் திருவுருவும் இங்கு பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன.




யாழ். சிவதொண்டன் நிலையம், நந்தன வருடத்து (1953) நவம்பர் மாதத்தில் திறப்புவிழாக்கண்டது. வண்ணார்பண்ணையில் காங்கேசன்துறை வீதியில் இருந்த 434 ஆம் இலக்க இல்லமே சிவதொண்டன் நிலையமாகப் பரிணமித்தது. அவ்வில்லத்தின் ஓர் அறை சிவபூசை செய்யும் அறையாக இருந்தது. முன்னர் அவ்வில்லத்தின் முன்பாக ஒரு தண்ணீர்த் தொட்டி இருந்தது. அத்தொட்டியிலே பசுக்கள் நீர் பருகித் தாகம் தணிந்து சென்றன. இந்தச் சிவபூசை நேசம், பசு ஓம்பும் தருமம் ஆகியனவே அச்சாமானிய இல்லத்தைத் திருவருள்மிகு சிவதொண்டன் நிலையமாய் ஒளிரச் செய்தது, செய்கிறது.

இவ்வில்லம் பெருகிவரும் அடியார்களுக்குப் போதாதிருந்தது. திருவருளானது 1955 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் இவ்வில்லத்தின் வடபக்கத்திலிருந்த இல்லத்தையும் இணைத்து வைத்தது. இவ்விரு இல்லங்களையும் வேண்டிய வண்ணம் திருத்தியும் புதுக்கியும் உருவாக்கியதே இன்று நாம் காணும் சிவதொண்டன் நிலையப் பெருங்கோயிலாகும். (தகவல் மூலம் : சிவதொண்டன் நிலையப் பொன்விழா மலர்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் வருடந்தோறும் நவம்பர் 4 ஆம் திகதி கால்கோள் விழா கொண்டாடப்படுகிறது.

மட்டக்களப்பில் செங்கலடியிலும் சிவதொண்டன் நிலையக் கிளை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது ஓர் அழகிய வனம். பூங்கொன்றை மலர்களின் நறுமணம் வீச செங்கலடி சிவதொண்டன் நிலையம் தபோவனம் போல் திகழ்கின்றது.

**சிவதொண்டன்! சிவபுராணம்! சிவத்தியானம்! சில குறிப்புக்கள்!**

சிவ+தொண்டன் என்பதை சேர்த்து எழுதும்போது வல்லினம் மிகுமாறு சிவத்தொண்டன் என்று எழுதுவதற்கு இலக்கண விதி இடம் கொடுக்கும். ஆனால் சிவதொண்டன் என்று எழுதுவதே வழக்கு. தொண்டனை சிவமாகப் பாவனை செய்வது சான்றோர் வழக்கு. சிவதொண்டன் என்று சேர்த்து எழுதும்போது சிவமாகிய தொண்டன் என்று பொருள் கொள்ளமுடியும். அவ்வாறே சிவபுராணம் என்பதே வழக்கு. இங்கும் வல்லினம் 'ப்' ஒருபோதும் மிகுமாறு எழுதுவதில்லை. சிவபுராணம் எனும் போது புராணமே சிவமாம் தன்மையதாகிவிடுகிறது. சிவபுராணமே சிவமாகிவிடும்.

சிவபுராணம், சிவதொண்டன் நிலைய நித்தியபாராயணப் பாடல்களில் ஒன்று. ஆனால் சிவ+தியானம் - சிவத்தியானம் என்று எழுதுவதே சரி.

**"சிவபுராணத்தில் ஒன்று(1), பதினெட்டு(18), முப்பது(30), ஐம்பத்தொன்பது(59) என்ற இலக்கத்தைக் கொண்ட சிவபுராணத்தடிகள் அளபெடை கொண்டவை. இன்றுளோர் இஃதறியார்."** இது உமாமகேசுவரன் நாட்குறிப்பு

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க(1)
அவனரு ளாலே அவன்தாள் வணஅங்கிச்(18)
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்(30)
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி(59)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவாமி யோகேஷ்வரானந்தா யோக சுவாமிகளை பின்வருமாறு மதிப்பிடுகிறார்:

"நான் இந்தியாவின் இமயமலைப் பகுதியில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தேன். யோக சுவாமியைப் போன்ற ஒருவரை இந்தியாவில் காண்பது அரிது. இந்தியா முழுமையிலும் இந்திய ஆன்மாவிலும் யோக சுவாமியைப் போன்ற ஒருவரைக் காணவேமுடியாது. (I who had lived fifty years of my life in the Himalayas can tell you that a person like Yoga Swami is a rarity even in India. You cannot find a person like him in the entire length and breadth of India).


*தகவல் மூலம்: சிவயோக சுவாமிகளின் அவதார 150 ஆவது ஆண்டு மலர் சிவதொண்டன் (2022 மே ஓகஸ்ட்)*

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)

# முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் ஆரம்பகால நினைவுகள்



மாணிக்கம் நடராஜசுந்தரம்
ஓய்வுநிலைப் பேராசிரியர்

விரிவுரையாளர்களும் விருப்பத்தின் பேரில் விரும்பிய துறைகளுக்குப் பிரிக்கப்பட்டனர். நான் முகாமைத்துவக் கற்கைகள் துறைக்குத் தலைவராகவும் திரு. க. தேவராசா வர்த்தகத்துறைக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டோம். ஆயினும், இரு துறைகளும் தொடர்ந்து கலைப் பீடத்திற்குக் கீழே தான் செயற்பட்டன. மாணவர்கள் அதிகளவிற்கு வர்த்தகத் துறைக்கும், முகாமைத்துவக் கற்கைகள் துறைக்கும் உள்வாங்கப்பட்டனர். இதன் விளைவாக விரிவுரையாளர்கள் தொகையும் அதிகரித்தது. அப்போதைய துணைவேந்தராக இருந்த பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளையின் முயற்சியால் புதியதொரு பீடம் (முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிக பீடம்) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது. துணைவேந்தர் தலைமை தாங்கிய 1999 முதல் ஆண்டு பேரவைக் கூட்டத்தில் நான் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டேன். அன்றைய தினம் மதியம் நான் வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமானதால் திரு.க.தேவராசா பதில் பீடாதிபதியாக ஒரு மாதகாலம் கடமையாற்றினார்.

**பீடத்தின் ஆரம்பம்**

பீடம் ஆரம்பித்த பொழுது அந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்த கல்வியாண்டுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். முகாமைத்துவக் கற்கைகள் துறையில் குறைவான மாணவர்களும் வர்த்தகத்துறைக்கு அதிக மாணவர்களும் கல்வி பயின்று வந்தார்கள். நான் வெளிநாட்டில் குறிப்பாக கனடா நாட்டில் மாணவர்களைச் சந்தித்த பொழுது தாங்கள் ஆங்கிலமொழியில் கல்வியைக் கற்காதது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனக் கவலை தெரிவித்தனர். "இப்பொழுது நாளொன்றுக்கு 18 மணித்தியாலங்கள் ஆங்கிலம் கற்கின்றோம். நீங்கள் யாழ்ப்பாணம் திரும்பியதும் ஆங்கிலமொழியில் எங்களுடைய பாடநெறியை மாற்றிக் கற்பிக்கவும், நாங்கள், நீங்கள் பலதடவை கூறியும் அதனைப் புறக்கணித்ததன் விளைவை அனுபவிக்கின்றோம். அடுத்த சந்ததிக்கு ஆங்கிலத்தில் கற்பித்து நல்ல எதிர்காலத்தை உருவாக்குங்கள்" என ஒருமித்த குரலில் கேட்டுக் கொண்டார்கள்.

1999 ஒகஸ்ட் மாதம் நான் யாழ்ப்பாணம் திரும்பி வந்ததும் பல்கலைக்கழக மூதவைக்கு என்னுடைய ஆதங்கத்தைப் பீடத்தின் அனுமதியுடன் ஆங்கிலமொழியில் கற்பிக்கப் போகின்றோம் எனக்கூறி அங்கீகாரத்தைப் பெற்றோம். சகல பீடாதிபதிகளும் பேராசிரியர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். இருந்தாலும், பல்வேறு வகையான எதிர்ப்புகளையும் நான் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. ஆசிரியர்கள் மௌனமாக இருந்தார்கள் எதிர்காலம் எவ்வாறிருக்குமென அவர்களுக்கு விளங்கும். மாணவர்கள் மத்தியில் பெரும் சஞ்சலம் ஏற்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தில் முற்றாகப் படிக்கமுடியாத சூழலில் இருந்தார்கள் : அத்தகையவர்கள் கவலையடைந்தனர். வெகுவிரைவில் நீங்கள் சுடப்படுவீர்கள் என்று ஒரு கடிதமும் என் கைக்கு வந்தது.

**அந்த நேரத்தில் நான் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் பீடம் சார்ந்த முதல் கூட்டத்திற்கு சென்ற பொழுது, ஆங்கிலமொழிமூலக் கற்பித்தலுக்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது. எமது பீடத்தை ஒரு உதாரணமாகக் கொண்டு சகல பல்கலைக்கழகங்களிலும் ஆங்கிலமொழிமூல கற்**பித்தலுக்கு மாறுமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. எமது பீடத்தின் தூரநோக்கு பலராலும் பாராட்டப்பட்டது. ஆயினும், மாணவர்கள் மத்தியில் பெரும் பய உணர்வு இருப்பதைக் காணமுடிந்தது. இதனாலேற்படும் நன்மைகள் பற்றித் தொடர்ச்சியாக விளக்கம் கொடுத்து வந்தோம். மீண்டுமொரு மாற்றத்தைக் கொண்டு வந்து மாணவர்களை சாந்தப்படுத்தினேன்.

முதலாவது ஆண்டில் இருமொழிக் கற்பித்தலுக்கான அங்கீகாரத்தை மூதவையிடம் பெற்று ஆங்கிலத்திலும் தமிழிலும் விடைகள் எழுதலாமெனவும் அல்லது இருமொழிகளையும் கலந்து விடைகள் எழுத சந்தர்ப்பம் வழங்கினோம். நான் பீடாதிபதியாக இருந்த ஆறு வருடங்களும், முதலாம் ஆண்டுக்கு முகாமைத்துவம், வங்கியியல் பாடங்களை ஆங்கிலத்தில் இலகு நடையில் கற்பித்து, தமிழ் மொழி மூலம் விளக்கமளித்ததன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கினேன். மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று உள்ளே வருவதற்கு முன்பே ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினார்கள். இதனால் நாம் வெற்றியடைந்து விட்டோம். ஆங்கிலமொழி மூலம் கற்றவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கா ஐ.ஈ.எல்.ரீ.எஸ். பரீட்சையிலிருந்து விதிவிலக்கு கிடைத்ததால் பலர் பரீட்சை முடிவுகள் வந்ததும், இங்கிலாந்து நாட்டிற்கு சென்று எம்.பீ.ஏ. மேற்படிப்புகளைத் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் பலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி விட்டனர். ஆங்கிலமொழிமூலக் கற்பித்தல் நடைமுறையிலிருந்த பொழுது மறக்கமுடியாத சில சம்பவங்களில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் ஆங்கிலத்தில் படிக்க முடியாதெனக் கல்வியை இடைநிறுத்திச் சொந்த ஊருக்குப் போகப் போகின்றேன் எனக் கவலையுடன் என்னுடன் கலந்துரையாடினார். அடுத்த நாள் என்னைக் கண்டதும் ஆங்கிலத்தில் 'குட்மோர்னிங் சேர்' என்றார். நான் அவரை அழைத்து 'காலை வந்தனம்' எனச் சொன்னேன். 'ஆங்கிலம் கடினம் என்று கூறிப் படிப்பை நிறுத்தப் போகின்றேன் என நீர் நேற்றுக் கூறியது ஞாபகமிருக்கின்றது' என்றேன். அவர் அப்பொழுது தான் உண்மையைக் கூறமுயன்றார். "நான் ஆங்கிலத்தில் கொஞ்சம் எழுதக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் சகமாணவர்கள் எனது விடையைப் பார்த்தால் பகிடி பண்ணுவார்கள்" என்றார். ஒருவருடைய விடைத்தாளை இன்னொருவர் பார்க்கமுடியாது. விரிவுரையாளருக்கு மட்டுமே தெரியுமெனக் கூறினேன். அத்துடன் அவர் மனநிலை மாறி ஆங்கிலத்தில் படித்து தற்போது நல்லதொரு தொழிலில் இருக்கின்றார்.

சாவகச்சேரியில் கார் வாடகைக்கு விடும் ஒருவர் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு எனது வீட்டிற்கு வந்தார். முதலாவது ஆண்டில் முகாமைத்துவக் கற்கைகள் துறையில் கல்வி பயிலும் தனது பிள்ளை ஆங்கில மொழி மூலக் கல்வி கடினமாக இருப்பதாகவும், கல்வியைக் கைவிடுவதற்குத் தீர்மானித்து விட்டதாகவும் கவலையுடன் கூறினார். உளரீதியாகப் பயப்படுகின்றாரென பிள்ளையுடன் கதைக்கும் பொழுது அறிந்து கொண்டேன்.

அடுத்த தவணை தொடக்கம் விரிவுரைகளுக்கு முன்வரிசையில் இருக்குமாறு புத்திமதி கூறினேன். பிள்ளையும் அவ்வாறே செய்யத் தொடங்கியது. படிப்படியாகப் பிள்ளையிடம் முன்னேற்றத்தை அவதானித்தேன். பின்வரிசைகளில் இருப்பவர்களில் பலர் என்னைத் திட்டித் தீர்ப்பார்களாம். இதனால் இந்தப் பிள்ளைக்கும் பயம் ஏற்பட்டு நாங்கள் எல்லோரும் பரீட்சையில் சித்தியடையமாட்டோம் என்ற எண்ணம் பிள்ளையை நிலைகுலையச் செய்தது. அந்தப் பிள்ளை தொடர்ந்து நன்றாகப் படித்து இரண்டாம் வகுப்பு மேற்தரத்தில் சித்தியடைந்தது.

படிப்படியாக மாணவர்கள் மத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டு ஆங்கில மொழியிலேயே கற்கத் தொடங்கி விட்டனர். வெளிநாட்டில் மாத்திரமன்றி உள்நாட்டிலும் பல துறைகளிலும் வேலை வாய்ப்பினைப் பெறக்கூடிய அளவுக்கு தமது அறிவை வளர்த்துக்கொண்டனர். குறிப்பாக நிர்வாகத் துறை, வங்கித்துறை, கணக்காளர், கணக்காய்வாளர்கள், திட்டமிடல் துறை, ஆசிரியர்கள், குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களில் நல்ல உயர் பதவிகளில் இருக்கின்றனர். வேலை செய்கின்ற சகல துறைகளிலும் சிறப்பாக இயங்கி வருகின்றார்கள்.

கனடா, இங்கிலாந்து நாடுகளுக்கு மீண்டும் 2007ஆம் ஆண்டு சென்ற பொழுது தற்செயலாக ஓர் உணவகத்தில் ஒரு மாணவனைச் சந்தித்தேன். கனடாவிலுள்ள பிரபல்யமான வங்கியில் உயர் அதிகாரியாக இருப்பதாகவும், ஆங்கில மொழிமூலம் கல்வி கற்றதே என்னை இந்த நிலைக்குத் தன்னைக் கொண்டு சென்றதெனவும் கண்ணீர் மல்கக் கூறி, அடுத்தநாள் நானிருக்குமிடத்துக்கு வந்து என்னை மதிய உணவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு வேறு சில மாணவர்களும் வந்திருந்தார்கள். அவருடைய மனைவி நீங்கள் தானே 'நடா சேர்'? என்று கேட்டார். தங்களுடைய வீட்டில் பல மாணவர்கள் ஒன்று கூடுவது வழக்கம். அப்பொழுது 'நடா சேர்' ஆங்கிலமொழி மூலக் கற்கை முறையை அறிமுகப்படுத்திய பொழுது நாங்கள் எங்கள் அறையிலிருந்து எப்படியெல்லாம் அவரைத் திட்டித் தீர்த்தோம், ஆனால் இன்று நாங்கள் நல்ல நிலையிலிருப்பதற்கு அவருடைய தூரநோக்கும், எதிர்கால சவால்களும் உலக அரங்கில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணரச் செயதவர் என வாழ்த்துவார்கள் என்று அவருடைய மனைவி கூறினார். எங்கள் பல்கலைக்கழகத்தில் எமது பீடத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளில் பலர் வெளிநாடுகளில் இலகுவாக ஆங்கிலமொழி மூலம் கலாநிதிப் பட்டங்களைப் பெற்று எங்கள் பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பலர் பேராசிரியர்களாகப் பதவியுயர்த்தப்பட்டு ஒவ்வொரு துறையிலும் இருக்கின்றார்கள். குறிப்பாக மூவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும், இத்துறைகளில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். எம்முடைய பீடத்திலிருந்து வெளியேறிய பலர் வவுனியாப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் (மட்டக்களப்பு), தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஓலுவில்) போன்றவற்றில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். எமது பீடம் பல இன்னல்களுக்கு மத்தியில் வளர்ந்து இன்று இலங்கையில் ஒரு உயர் பீடமாகப் பலராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது முக்கியமான அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரெனும் அனுபவப் பொக்கிஷங்கள்



ச.அபிசரன்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை

21 ஆம் நூற்றாண்டில் பாதிக்கப்பட்டு வரும் அதிமுக்கியமான பிரிவினராக முதியவர்கள் அமைகின்றனர். ஒரு குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டையும் பேணிப்பாதுகாத்த அன்றைய இளைஞர்களே இன்றைக்கு முதியவர்களாக மாறியிருக்கின்றனர். அவர்களது சுதந்திரம், உரிமை, கடமை என்பன அவர்களின் பிள்ளைகள் மற்றும் சமூகம் சார்ந்து பாதுகாப்பானதாகவும் நீதியானதாகவும் அமைய வேண்டும். முதியவர்கள் நாடளாவிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அங்கீகாரம், கௌரவம், உரிமை, சுதந்திரம்,தனித்துவம் தொடர்பில் மதிப்பளித்து போற்றிப் பாதுகாக்கவேண்டிய தெய்வங்களாவர். தமது அனுபவத்தால், கல்வியால், பக்குவத்தால், முயற்சியால் உலகை வென்று அனுபவித்த, அறிவுக்கு விடை தேடிய அனுபவசாலிகள்,புத்திசாலிகள், பொறுமைசாலிகள் முதியோரே.

உலக நாடுகளில் வாழும் மக்கள் தொகையில் பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் முதியவர்களாவர். நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உள்ள இளைஞர்களுக்கு காலவோட்டத்தில் முதுமையடைந்து, அவர்களின் இயங்குதிறன் இழக்கப்படுவதால் அவர்களது இறுதிக்காலமும் சுமையாகிவிடுகிறது. தம் பிள்ளையின் கல்வி, தொழில், எதிர்காலம் பற்றிப் பேசும் ஒவ்வொரு பெற்றோரும் ஏன் தங்களுடைய பெற்றோர் பற்றி சிந்திக்க மறந்துவிட்டனர்?. இப்போது சுமையாகிவிட்டதாக தட்டிக்கழிக்கப்பட்ட ஒவ்வொரு முதியவர்களும் தமது இளமைக் காலத்தில் தம் பிள்ளைகளை சுமையென்று நினைத்திருந்தால் இப்போது இவர்களது நிலைமை என்ன? ஏன் முதியோர் இல்லங்கள் அதிகரித்துவிட்டன? சமூக மாற்றத்தையும் நாட்டு விடுதலை பற்றிப் பேசுபவர்களில் எத்தனை பேர் தமது பெற்றோரை தம்மோடு வைத்து பராமரித்து வருகின்றனர்? அனுபவங்களின் களஞ்சியமான முதியோர்கள் தங்கள் வாழ்நாளில் பலவிதமான சூழ்நிலைகளை எதிர்கொண்டுள்ளனர். அவர்களின் அனுபவங்கள் நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஞானத்தின் ஆதாரமான அவர்களது அனுபவங்கள் நாம் சரியான முடிவுகளை எடுக்க உதவும். கலாசாரத்தின் பாதுகாவலரான முதியோர்கள் நம்முடைய கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களை பாதுகாத்து வருகின்றனர். ஐ.நா. சபையின் அறிக்கையின்படி, உலகளவில் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக 72 கோடி முதியவர்கள் உள்ளனர். அடுத்த 30 ஆண்டுகளில் உலகளவில் இந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரிக்கும் என்றும் ஐ.நா. சபையின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இயந்திரமயமாக ஓடிக்கொண்டிருக்கும் வாழ்வில் முதியோருக்கென்று நேரத்தை செலவிட்டு அவர்களுடைய கதைகளைக் கேளுங்கள் அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். தனித்துவத்தையும் அங்கீகாரத்தையும் உறுதிப்படுத்துங்கள். பிள்ளைகளுக்காகவே வாழ்ந்து, இளமையையும் தொலைத்து, சொத்துக்களை இழந்து, துன்பங்களை வென்று, தனக்கென சேமிப்பு எதுவுமின்றி வாழும் ஒவ்வொருவருக்கும் கிடைத்த பரிசு முதியோர் இல்லமும், அநாதை என்ற முத்திரையுமே. இந்த நிலையை மாற்ற சங்கல்பம் செய்யுங்கள்.

■

# வழுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய நெருக்கமான பல அறிதல்களைக் கொண்டவர். அவரது கருத்துகளை உரியவர்கள் கொஞ்சம் காதுகொடுத்துக் கேட்பது ஆரோக்கியமாக அமையும்.

யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் இந்த நீண்டநாள் பிரச்சினை தொடர்பாக தற்போது சில முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பாலத்தின் இரு மருங்கிலும் வேகத்தடைகள் (speed breakers)அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் வேகத்தைக் குறைக்கும் வகையிலும் என்ன கதியில் பயணிக்கலாம் என்பதனைக் குறிப்பிடும் வகையிலும் வீதிச் சமிக்ஞைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இந்த நடவடிக்கையின் தற்காலிகத்தன்மை மற்றும் முழுமையற்ற தீர்வினால் மக்கள் அதிருப்தி கொள்கின்ற சூழலும் நிலவத்தான் செய்கிறது.

இந்தப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, பாலத்தை முறையாக மாற்றியமைத்துப் பராமரிக்க வேண்டும். வீதியின் சிறந்த பிடிப்புக்காக நன்குவடிவமைக்கப்பட்ட எதிர்ப்புப் பூச்சுகளை உருவாக்க வேண்டும். (antislip coatings specifically designed for iron surfaces) இது இந்தப் பிரச்சினைக்கு உடனடியான மற்றும் ஒரு பயனுள்ள தீர்வாக இருக்கும். இரும்பு மேற்பரப்புகளில் இந்த பூச்சுகள் மழையின் போது கூட மேற்பரப்பு உராய்வை அதிகரிக்கின்றன, மேலும் நழுவுவதற்கான அபாயத்தை கணிசமாகக் குறைக்கக்கூடியன. பாலத்தின் மேற்பரப்பில் பள்ளங்கள் அல்லது நிலையான பிடிப்பினை ஏற்படுத்தும் வடிவங்களை நிறுவுவதல் (installation of grooves or patterns) மற்றொரு தடுப்பு நடவடிக்கையாகும். இந்த இழைமங்களால் போதுமான இழுவையை (GRIP) வழங்க முடியும், ஈரமாக இருந்தாலும் கூட ரயர்கள் மற்றும் பாதணிகள் மேற்பரப்பை நன்றாகப் பிடிக்க இவை அனுமதிக்கின்றன.

வழக்கமான பராமரிப்புச் சோதனைகளும் விபத்துகளைத் தடுப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. குறிப்பாக கனமழைக்குப் பிறகோ அல்லது பாலத்தடியில் ஏதும் சேதம் ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் தென்பட்டாலோ அவற்றை உடனடியாகச் சரிபார்க்க வேண்டும். கூடுதலாக, மழைகாலத்தில் வழுக்கும் அபாயம் குறித்து தெளிவுபடுத்தும் வகையில், பாதசாரிகள் மற்றும் ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை பலகைகள் மற்றும் சமிக்ஞை விளக்குகள் நிறுவப்பட வேண்டும். பாலத்தின் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்களும் விபத்துகளைக் குறைக்க உதவும், ஏனெனில் மழைகாலங்களில் பயணிகள் அதைக் கடக்கும்போது அதிக எச்சரிக்கையுடன் இருப்பார்கள். அருமந்த உயிர்களும் காப்பாற்றப்படும்.

■

# வாழ்வுக்கு...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

**குறிப்புகள் / குறிப்புக்கள்**

குறிப்புக்கள் என்று வல்லினம் மிகுமாறு எழுவதே திருத்தமானது. ஒரு தடவை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் உமாமகேசுவரனும் அவரது ஆசிரியர் கலாநிதி க. சச்சிதானந்தனும் (முன்னர் குறிப்பிட்ட அறிஞர், கி.அ. சச்சிதானந்தம் தமிழகத்தைச் சேர்ந்தவர்), சந்தித்த போது "குறிப்புக்கள் என்று எழுதுவது தான் சரி என்கிறாயே இதற்கு ஆதாரம் காண்பிக்க முடியுமோ" என்று கேட்டார். உடனே உமாமகேசுவரன் கணேசையருடைய தொல்காப்பியப் பதிப்பை, தமிழ்ச் சங்க நூல்நிலையத்தில் இருந்து எடுத்துக் காண்பிக்கிறார். நூலின் அட்டையிலே "இவை தமிழ் வித்துவான் புன்னாலைக் கட்டுவன், பிரமஸ்ரீ சி. கணேசையர் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களுடன், ஈழகேசரி அதிபதி நா. பொன்னையா அவர்களால் தமது சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் பதிப்பிக்கப்பட்டன." என்றிருந்தது. இது வித்துவான் கணேசையர் பார்வையில் 1937 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.

உமாமகேசுவரன் காண்பித்த கணேசையருடைய தொல்காப்பியப் பதிப்பைப் பார்த்துவிட்டு "உன்னட்டை படிப்பதற்கு நிறைய இருக்கிறது" என்றார் மதுரைப் பண்டிதர் க. சச்சிதானந்தன்.


சிவதொண்டன் நிலையம், சிவயோக சுவாமிகள், திருக்குறள், தமிழர்களது தேசிய இலக்கியம் என்று சொல்லப்படும் 63 நாயன்மார்களது வீரகாவியத்தைப் பாடும் சேக்கிழாரது பெரியபுராணம் முதலானவை பற்றி எழுதுவதுக்கான எந்தவித அடிப்படைத் தகுதியும் அறிவும் எனக்கு இல்லை. ஆசிரியப்பிரான் உமாமகேசுவரனது சில குறிப்புகளையே இங்கு யான் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதிருப்பதுக்காக காலத்துடன் தொடர்புபடுத்தி எழுதுகின்றேன்.

**யாழ்ப்பாணத்துக்கு மகுடம் சேர்த்த திருக்குறள்!**

திருக்குறளை அமெரிக்காவிலே பைபிள் அச்சிடும் தாளில் புத்தக ஓரத்துக்கு தங்க முலாம் பூசி வெளியிட்டனர். அது ஒரு பொக்கிசம்; தங்க முலாம் பூசியதால் அல்ல. அதிலே பலரது உரைகள், ஆங்கில மொழி பெயர்ப்பு, தமிழர் வரலாறு முதலான இன்னோரன்ன அருமையான பல விடயங்கள் உள.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் திருக்குறள் பதிப்பொன்று வெளிவந்துள்ளது. உரையாசிரியர் முனைவர் ச. மனோன்மணி அவர்கள். இதன் சிறப்பு யாதெனில் திருக்குறள் மூலத்துடன், செய்யுட் பிரிப்பு, கட்டமிடப்பட்ட சொற்பொருளுரை, பொழிப்புரை, குறிப்புரை என்றவாறு சிறந்த முறையில் இதனைப் பதிப்பித்துள்ளனர். முனைவர் ச. மனோன்மணி அவர்களது உரை எளிமையானது; தனித்துவமானது. இந்தியாவிலோ இலங்கையிலோ இதுவரை பெண்பாற் புலவர் ஒருவரது உரையுடன் திருக்குறள் பதிப்பிக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்துக்கு இது மகுடம். முனைவர் ச. மனோன்மணி அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களுக்கு சைவப்புலவர் கு.றஜீபன் M.A, அவர்கள் இந்நூல் செம்பதிப்பாக வெளிவர உறுதுணையாக இருந்தார்.

நிலையாமை என்னும் அதிகாரத்தில் வரும்,

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

என்ற 336 ஆவது குறளுக்கு மனோன்மணி அம்மையார் தரும் உரை:

"நேற்று உயிரோடு இருந்த ஒருவன் இன்றைக்கு இல்லையே என்னும் இரக்கமான பெருமையை உடையது இந்த உலகம்."

உமாமகேசுவரன் நினைவு கூரும் குறள் வெண்பாக்களில் இதுவும் ஒன்று.

(தொடரும்)

# சிறுவர் கைவண்ணம்


**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்களை ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




லி.ரோகித்
தரம் - 9
யாழ். இந்துக் கல்லூரி




Arulappu Alaxcius Julian croos Tiffany
தரம் - 10
யா/ சண்டுக்குழி மகளிர் கல்லூரி.




ர.பிரவீன்
தரம் - 6E
சாவகச்சேரி இந்துக் கல்லூரி



உ.அஜய்
தரம் -3A
யா/ ஆனைப்பந்தி.மெ.மி வித்தியாலயம்

சி பிரவீன்
தரம் - 7d
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி






கேதுசன்
தரம் - 11D
யாழ்/ பரியோவான் கல்லூரி



T.கன்சிகா
தரம் - 8E
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



M.கன்சிகா
தரம் - 6J
யா/ நெல்லியடி மத்திய கல்லூரி




ரி.பவிஷ்,
தரம் - 6.
யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ஜ.சைந்தவி,
தரம் - 10A,
சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் வீரர் அல்ல நான் செயல் வீரர்

**மொத்த திட்டங்கள்**
**20,268 +**

**மொத்த ஒதுக்கீடு**
**ரூ 4,553,308,077**

**மொத்த பயனாளிகள்**
**444,416 +**

**மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP)** (வடமாகாணம்)

| | |
|---|---|
| 2019 | ரூ 605, 331 மில். |
| 2023 | ரூ 729, 573 மில். |

**வேலைவாய்ப்பின்மை**


| | யாழ் | கிளிநொச்சி |
|---|---|---|
| 2019 | 6.7% | 6.1% |
| 2023 | 4.0% | 3.9% |

56 முன்னாள் போராளிகளுக்கு
**ரூ 150,000**
பெறுமதியான வாழ்வாதார உதவிகள்

மத்திய அரசின் விசேட நிதிகளூடாக
207 முன்னாள் போராளிகளுக்கு
**ரூ 4 மில்.**



யாழ், கிளிநொச்சி மாவட்ட
வீடமைப்புத் தேவைகள்




**இந்தியாவுடனான போக்குவரத்து**

- **2** விமான சேவை நிறுவனங்களின் போக்குவரத்தை ஆரம்பித்தமை
- காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி
- தமிழகத்துடனான கப்பல் சேவையை ஆரம்பித்தமை

3 மில்லியன் வேலைத்திட்டம் 2022 — **80,000** பயனாளிகள்

150 மில். விசேட நிதி — **28,000** பயனாளிகள்

குளங்கள் புனரமைப்பு — **10** திட்டங்கள்

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் — **35,000** பயனாளிகள்

**கல்வித்துறை**
A/L தகுதி




வீட்டுத்தோட்டம், வாழ்வாதாரம்
**1,185**
திட்டங்கள்

வீட்டுத்திட்டம்
**3,488**
பயனாளிகள்

மின்சாரம்
**2,005**
பயனாளிகள்

உற்பத்தி கிராமம்
**1,292**
பயனாளிகள்

நிறைவான கிராமம்
**271,195**
பயனாளிகள்

மலசலகூடம்
**914**
பயனாளிகள்

ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
ஜனநாயக தேசிய கூட்டணி
Democratic National Alliance

X 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்பிட்டிய தேர்தல் முடிவு அபாய எச்சரிக்கை மணி

### ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

எல்பிட்டிய தேர்தல் முடிவுகள் அபாயகரமான நிலைமைக்கான ஒரு முன் அறிவிப்பாகும். எதிர்க்கட்சியின் உறுப்பினராக இருந்தபோது கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது எந்தளவு கடினமானது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது புரிந்து கொண்டிருப்பார்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேசுவதைப் போன்று நடைமுறையில் செயற்படுத்துவது இலகுவானதல்ல. எரிபொருள் விலைகள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளிட்டவை தொடர்பிலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அவை எவற்றையும் தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை- என்றார். (ச-இ)

# இளையோரைப் பாதுகாக்க விளையாட்டை ஊக்கப்படுத்துக

### வேட்பாளர் றொஜன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

போதைப்பாவனையில் இருந்து எமது எதிர்கால சந்ததியான இளையோரைப் பாதுகாக்க விளையாட்டுத்துறையை மேம்படுத்த வேண்டும்.

- இவ்வாறு மன்னார் பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டபோது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மன்னார் மாவட்ட வேட்பாளர் அ. றொஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. அவர்கள் வழிதவறிப் போவதை அவதானிக்கமுடிகிறது.

அந்தவகையில் அவர்களைப் பாதுகாக்க விளையாட்டு நிகழ்வுகள் உறுதுணையளிக்கின்றன. இளையோரை விளையாட்டில் ஈடுபடுத்துவன் மூலம் அவர்களைப் போதைப்பாவனையிலிருந்து மீட்டெடுக்க முடியும். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதை கருத்தில் கொண்டு போதைப் பாவனையை கட்டுப்படுத்த எம்மாலான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார். (ச-56)

# பொருள்களின் விலை சதொசவில் குறைப்பு

கொழும்பு, நவ. 3

லங்கா சதொச நிறுவனம் நேற்றுமுன்தினம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் சில பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ பாசிப் பயறின் விலை 799 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளை கௌபியின் விலை 880 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் விலை 243 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளன.

மேலும், அனைத்து சதொச பல்பொருள் அங்காடிகளிலும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தை 300 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இலங்கை சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. (ச)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சுவாமியார் வீதியில்
3 பரப்புக் காணியுடனான
வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்)
தொடர்புக்கு:- 077 614 6434
(CS/56578) J-1

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார்
நிறுவனம் ஒன்றில் தனிநபர்
ஒருவருக்கு சமையல்
செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
077 717 2217
(CR/43592) J-1

## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நட்சத்திர விடுதிக்கு சகல துறைகளுக்குமான வேலை வாய்ப்புக்கள் உண்டு. கவர்ச்சிகரமான சம்பளமும் உணவும் வழங்கப்படும். சுயவிபரக் கோவையை கீழ்காணும் மின் அஞ்சலுக்கு அனுப்பவும். அல்லது கீழ் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக ஒப்படைக்கவும்.

திண்ணை ஓர்கனிக் பார்ம்
9/10, புத்தூர் வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.
aom@thinnaifarms.com

## பராமரிப்பாளர் தேவை

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு
பகுதியில் அமைந்த வீடு மற்றும்
காணி ஒன்றைப் பராமரிப்பதற்கு
சிறிய குடும்பம் ஒன்றிற்கு
பராமரிப்பாளர் தேவை.
074 332 0384
(CS/29224) J-1


# மரண அறிவித்தல்

## துரைராசா ராஜ்யந்தன் (ராசுக்குட்டி)



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா ராஜயந்தன் அவர்கள் கடந்த (28.10.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - விஜயலக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சீதா அவர்களின் அன்புக் கணவரும், கம்சிகாவின் அன்புத் தந்தையும், துஸ்யந்தி, நர்மதா (கனடா), விஜயந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற துஸ்யந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த 30.10.2024 இல் இலிருந்து அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று (03.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 04.06.1972 — இறப்பு 28.10.2024

தகவல்:
குடும்பத்தினர்.

பிள்ளையார் கோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

(CS/29225) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1986 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் (P) சேர்ந்த தச்சு நிறுவன முதலாளிக்கு வரன் தேடப்படுகிறது.

075 559 3232

## வாடகைக்கு உண்டு

அத்தியடி பகுதியில் அமைந்துள்ள புதிய மாடி வீடு ஒன்றில் மேற்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் நடாத்துவதற்கு உகந்தது).

076 535 2615

## SPOKEN & GRAMMAR ENGLISH CLASSES

GRADE 7 TO GCE O/L, ADVANCED LEVEL, GRADUATES

தொழில் புரிவோர் பேசப்பழக சிறந்த வகுப்புகள்

யாழ் இந்து வீதியில்

K.Ganesh B.A 077 766 8725

## வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகாமையில் முருகேசர் வீதியில் மாதாந்த வாடகை அடிப்படையில் வீடு வாடகைக்கு உண்டு. (Open Kitchen, Room With Attached Bathroom and Room). சிறிய அலுவலகம் நடத்துபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

076 352 8517, 077 837 4756

## பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

அமெரிக்க லொத்தர் இலவச விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2026ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்கு மேற்பட்ட யாவும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலகுவாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

V2 Travels 0768226244

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி (யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து 500m குள்) 3 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 074 175 9214

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில், மட்டுவில் சந்தியில் 1 3/4 பரப்புக் காணியில் அமைந்த மூன்று அறைகளைக் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு

076 464 5279

## நீர்கசிவை தடுப்பதற்கு

10 வருட உத்தரவாதத்துடன் சீர்செய்து தருவோம்

உலகத்தரம்மிக்க கட்டட இரசாயனப் பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

போலிகளைக்கண்டு ஏமாறவேண்டாம்

45000 36kg MasterSeal- 540, பரலாஸ்ரிக்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## GARUDAN

www.Garudan.lk
011 700 6204

வெய்யில் பட்டா காசுதான்...

**40 kW On grid solar power system for Business**

விலை 3,878,600/-

மாத வருமானம் 185,000/-

குறைந்த முதலீட்டுடன் அதிக வருமானம்

Warranty: DEYE SUN-40K-G05 Inverter - 10 years and 595 JA N Type By facial / 590W Jinko – Tiger Neo N Type TopCon Solar Tier-1 panels 30 years.

JA SOLAR Deye JinKO Solar Tiger Neo N-Type


Garudan Solar : 077 444 5909 / 077 888 7051 / 021 720 5400

# YARLVISION ACADEMY OF FINE ARTS

## STARTING DANCE CLASSES

Indivual Classes & Group Classes & Online Class

1. Bharathanatyam Basics
2. Bharathanatyam School Sylabus From 6 to A/L
3. North Ceylon Oriental Music society Grade (NCOMS) Exams From Gr 1 to 6.
4. Bharathanatyam karnass training
5. dance basic excercise



யாழ்விஷன் நுண்கலை கல்லூரியில் பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், வயலின் ஆகிய வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் தொடர்புகொள்ளவும்.


இடம் : 09, ஆலய வீதி, 4 ஆம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

NO. 09, TEMPLE ROAD, 4TH LANE, KOKUVIL EAST, KOKUVIL.
*ADIYAPATHAM ROAD, THIRUNELVELY.
TEL: 021 221 0090 | 076 243 0394 | 076 772 0059| 076 485 6360
E-mail: yarlvision@gmail.com | Face Book: YarlVision Charity

# ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி

## பாராளுமன்ற தேர்தல் - 2024

## வன்னித் தேர்தல் மாவட்டம்



(மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

எங்கள் வன்னி எங்கள் மக்களுக்கு

## தி.இடபாருடன்



1 2 3 4 5 6 7 8 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.